Free Circulation Germany- England
மணி: 72 - ஓசை: 312 புரட்டாசி. September. 2022

# வெற்றிமணி

Vettimaniy
ESTD 1950
28TH years IN EUROPE Successful Publishing
பிரதம ஆசிரியர் கலாநிதி மு.க.சு.சிவகுமாரன். B.F.A

Orientalisch
Textilien & Schmuck
32 ஆவது ஆண்டு நிறைவு

தரமும், மலிவும், ஒரே இடத்தில்
Königswall 16 (Am Hbf)
44137 Dortmund
Tel:0231 162377

# இங்கையில் இலக்கு வைக்கப்படும் திருக்கோணேஸ்வரம்

கொழும்பிலிருந்து ஆர்.பாரதி



ஆண்கள் என்ன எப்போதும் கத்தியும், கடப்பாரையும் தூக்கிக் கொண்டுதான் திரிகிறார்களா?

Dr.IN

ஜெர்மனியில்
தமிழர் தெருவிழா 2022







# ஆணும், பெண்ணும் பழகிப்பார்க்க மட்டுமா காலவகாசம்!

## ஆடைகள் பொருத்தம் பார்ப்பதற்கும் நூறுநாள் அவகாசம்!!

இப்போ திருமணத்திற்கு முன்பே ஆணும், பெண்ணும் பழகிப்பார்க்கலாம், உங்களுக்கு திருப்தி இல்லை என்றால், மனமாற்றம் ஏற்பட்டால், விடலாம், திரும்பி அவர் அவர் வாழ்க்கைக்கு திரும்பலாம் என்று ஆணும் பெண்ணும் உத்தரவாதத்துடன் செய்யும் dating டேற்றிங் போல் வியாபாரமும் மாறிவிட்டது.

கடைகளில் நான்குபக்கம் கண்ணாடி வைத்து இருந்தாலும், அந்த உடைபோட்டுபார்க்கும் அறையை (fitting room) ஐ விட, உலகிலேயே ஆடை அளவுபார்த்து, அழகு பார்க்க சிறந்த இடம் வீடுதான். இதனைக் கடைகளே அறிவிக்கும் காலம் இப்போது. 100 நாட்களுக்கு உங்கள் (Satisfaction) திருப்திக்கு உத்தரவாதம், 100 நாட்களில் உங்களுக்கு மனம் மாற்றம் ஏற்பட்டால் திருப்பித்தரலாம். இப்படி ஒரு பிரசுரம் இங்கிலாந்தில் கடைகளில் ஒட்டப்பட்டு இருந்தது.

மணம் முடிக்கிறோமோ இல்லையோ பழகும் மட்டும் சந்தோஷம் போல், வேண்டுகிற உடுப்புகள் வீட்டிற்கு எடுத்துச் சென்று 100 நாட்கள் வரை அழகு பார்த்து, பாவித்தாலும் தெரியவாபோகிறது. பலர் படம் எடுப்பதற்கு இப்படி எடுத்து வந்து, படம் எடுத்தபின் திருப்பி கொடுப்பார்கள். வடிவேலு என்றாலும் வாடைக்குத்தான் எடுப்பார், இப்படி ஓசியில் அல்ல. உங்களுக்கு பிடிக்கவில்லை என்று எண்ணினால், காரணம் கூடச் சொல்லத் தேவை இல்லை திருப்பிக் கொடுக்கலாம்.

ஒரு பொருளை 14 நாட்களில் பிடிக்காவிட்டால் திருப்பிக்கொடுக்கலாம். (உணவுப் பொருள் தவிர்ந்த) அது பொது விதி. இந்த 100 நாள்


மாதவி

சங்கதி, இந்த வியாபார முறை இங்கிலாந்தில் கொரோனா காலத்தில் கடைகளில் உடைமாற்றும் இடங்கள் பூட்டப்பட்டு இருந்தமையால், உருவானது. ஆனால் அதில் வாடிக்கையாளர்களின், மறதியும், அலுப்பும், அக்கறையீன்மையும், அவர்களுக்கு வெற்றியாகவே! இத்திட்டத்தை தொடர வைத்துள்ளது.

உண்மையில் இன்று சொப்பிங் ஒரு வகை நோய் போல் இளம் பெண்களுக்கு ஏற்பட்டுள்ளதைக் காணலாம்.

வாங்குவதில் இருக்கும், இன்பம் போடுவதில், இல்லை. போட்டாலும் ஒரு முறையோடு சரி. வாழையிலை, கருவேப்பிலை போல் தூக்கி எறியவேண்டியதுதான். அத்துடன் எது போட்டேன்! போடவில்லை!! என்பதை தமது பேஸ்புக், இன்ஷரகிறாம், ருவிட்டர், இவற்றில் பார்த்தே தெரிந்துகொள்ள முடியும், அதனால் பாதி உடுப்பு 100 நாட்கள் கடந்துவிடும், பின்பு பிடிக்காவிட்டாலும் திருப்பிக் கொடுக்க முடியாது.


இளம் வாடிக்கையாளர்களை குறிவைத்து, இப்போது பல ஆடைகள் விற்பனைசெய்யும் கடைகளில் இந்த அறிவித்தல் காணக்கூடியதாக உள்ளது. முதியவர்கள் பாடு சொல்லத் தேவையில்லை. அவர்களின் இயல்பான மறதிபோதுமே!

இதுபோல் தமிழர் புடவைக்கடையில் செய்தால் எப்படி இருக்கும்? 100வது நாள் திருப்பிக் கொடுப்பதற்கு சனம் முட்டி மோதும்.

**பின்குறிப்பு:** பிளவுஸ் பீஸ் வெட்டி இருந்தாலோ, பிளவுஸ் தைத்து இருந்தாலும், ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது, என ஒரு குறிப்பு வேறு சேர்க்கவேண்டியிருக்கும்.



வெற்றிமணி
தமிழ் எங்கள் உயிருக்கு மேல்
ஓசை : 312


ஆரம்பம்: 1950
ஸ்தாபகர்
அமரர் மு.க.சுப்பிரமணியம்
( முன்னாள் அதிபர்: குரும்பசிட்டி பொன். பரமானந்தர் வித்தியாலயம்)

பிரதம ஆசிரியர்
'ஓவியக்கலைவேள்'
கலாநிதி
மு.க.சு.சிவகுமாரன்
Chief Editor:
Dr.M.K.S.Sivakumaran B.F.A



Tel: +49 01631992333
+49 01631992333
e-mail: vettimaniy@hotmail.com


"வெற்றிமணிமொழி'
தோல்வியைக் கண்டு
அஞ்சுபவர்களிடமிருந்து
வெற்றி தானாகவே
விலகிச்செல்கிறது


Vettimaniy Ltd
Company No: 8876276


# இங்கையில் இலக்கு வைக்கப்படும் திருக்கோணேஸ்வரம்

இலங்கையிலிருந்து
ஆர்.பாரதி

ஈழத் தமிழர்களின் தலைநகராகக் கருதப்படும் திருகோணமலையில் உள்ள வரலாற்றுப் பிரசித்தி பெற்ற திருக்கோணேஸ்வரம் கோவிலின் ஆபத்தான நிலை தொடர்பில் ஆறு.திருமுருகன் அறிக்கை ஒன்றின் மூலம் அனைவரது கவனத்துக்கும் கொண்டுவந்திருக்கின்றார். இவ்விடயத்தில் தமிழ் மக்களின் பிரதிநிதிகள் உடனடியாகச் செயற்படாவிட்டால், திருக்கோணேஸ்வரம் முற்றுமுழுதாக சிங்கள மயமாக்கப்பட்டுவிடும் ஆபத்தை எதிர்கொண்டிருக்கின்றது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனைப் பிரதிநிதித்துவப் படுத்தும் பகுதியாகத்தான் திருமலை உள்ளது. ஆனால், வயது முதிர்ச்சி மற்றும் சுகவீனம் காரணமாக கொழும்பிலேயே பெருமளவுக்குதத் தங்கியிருக்கும் சம்பந்தன் இந்த விவகாரத்தில் எந்த வகையிலும் சம்பந்தப்படுவதில்லை என தமிழரசுக் கட்சியின் பிரமுகர்கள் சிலரே குற்றஞ்சாட்டுகின்றார்கள்.

திருமலையை முற்றுமுழுதாக சிங்கள மயப்படுத்துவதற்கான நிகழ்ச்சி நிரலுடன் அரச இயந்திரம் தீவிரமாகச் செயற்பட்டு வரும் நிலையில், அதற்கு எதிராக களத்தில் நின்று போராடக்கூடிய தமிழ்த் தலைவர்கள் யாரும் இல்லை என்பது தமிழர்களைப் பொறுத்தவரையில் மிகப்பெரிய பலவீனம்.

வரலாற்றுப் பிரசித்திபெற்ற திருக்கோணேஸ்வரர் ஆலயத்தின் அபிவிருத்திப் பணிகளுக்குத் தொல்லியல் திணைக்களம் முட்டுக் கட்டையாக இருப்பதுடன் தற்போது அவர்களின் அனுமதியுடன் சுற்றாடலில் சிங்களவர்கள் தற்காலிகக் கடைகளை நிரந்தர மாக்குகின்ற செயற்பாடுகளும் கனகச்சிதமாக மேற்கொள்ளப்படுகின்றன. தமிழ்த் தலைமைகளின் பலவீனத்தை இவர்கள் தமக்கு சாதகமாகப் பயன்படுத்திக் கொள்கின்றார்கள்.



சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த சைவத் திருக்கோவிலாகிய திருக்கோணேஸ்வர ஆலயத்துக்குச் செல்லும் வழியில் 2009 இற்குப் பின் அவசர அவசர மாக வீதியின் இருமருங்கிலும் இரத்தினபுரியைச் சேர்ந்தவர்கள் எந்த உத்தரவும் இன்றி தற்காலிக கடைகளை அடாவடியாக அமைத்தனர். அந்தக் கடைகள் தற்போது பெருமளவுக்கு அதிகரித்து விட்டன. இந்தக் கடைகள் அமைப்பவர்களுக்கும் திருக்கோணேஸ்வரக் கோயிலுக்கும் எவ்வித தொடர்பும் கிடையாது. திட்டமிட்டு ஆலயச்சூழலை ஆக்கிரமிப்பது போல் இந்தக் கடைகள் அமைக்கப்பட்டன.



இது தொடர்பாக திருக்கோணேஸ்வர நிர்வாகம் பல இடங்களிலும் முறைப்பாடு செய்த போதிலும் எவ் வித பலனும் கிட்டவில்லை. தற்போது திருக்கோணேஸ்வரம் செல்லும் பாதைக்கு அருகில் கோவில் சம தரையில் இவர்களுக்கு நிரந்தரக் கட்டடம் அமைக்க தொல்லியல் திணைக்களம் திட்டமிட்டு வருகிறது. உண்மையில் இதனைச் செய்வதற்கான எந்த அதிகாரமும் தொல்லியல் திணைக்களத்துக்கு இல்லை. அரசாங்கமும் படையினரும் தமது இந்த ஆக்கிரமிப்புக்கு துணை நிற்பார்கள் என்பதுதான் அவர்களின் பலம்!

கடந்த வாரம் தொல்லியல் திணைக்களத்தால் திருக்கோணேஸ்வர ஆலய நிர்வாகசபை தலைவரும் செயலாளரும் அழைக்கப்பட்டு தெருவோரம் வர்த்தகம் செய்வோருக்கு கோவிலுக்கு சமீபமாக நிரந்தர கட்டடம் அமைக்க தங்கள் தொல்லியல் திணைக்களம் அனுமதி அளித்துள்ளதாகவும் அதற்கு ஆலயம் சம்மதம் தெரிவிக்க வேண்டும் எனவும் வலியுறுத்தியுள்ளனர். கடந்த சில வருடங்களாக தொல்லியல் திணைக்களம் கோணேஸ்வரர் ஆலய திருப்பணி வேலைகளைத் தடுத்து வருவதை அனைவரும் அறிவர்.

தேரோடும் வீதியை அகலிக்கத் தடுத்தனர். அழிந்துபோன அன்னதான மடத்தை விஸ்தரிக்கத் தடுத்தனர். வாசலில் பெருங்கோபுரம்

26 ஆம் பக்கத் தொடர்ச்சி...




# நியூட்டனின் மூன்றாம் விதி



வி.மைக்கல் கொலின்
(இலங்கை)



நிலவு தூங்காத இரவொன்றில்
இருவரும் உறங்கிக் கிடந்தோம்

தீரா காதலின் பெரு வெளியில்
நீ பிரியம் தந்தாய்.

நான் ஒரு கிண்ணம்
நிறைய கவிதைகள் தந்தேன்.

உறக்கமும் கனவும்
கலந்த பித்த நிலை

எங்கள் படுக்கையறையில்
தொங்கிய படச் சட்டகத்தில்
திமிறிப்பாயும் குதிரை
எம் கட்டிலுக்கு அருகில் வந்து
கனைத்தது

நீ விழித்துக் கொண்டாய்
உறக்கம் கலைந்த
என்னையும் ஏற்றிக்கொண்டு
குதிரையை செலுத்துகிறாய் நீ

மாவலி நதியோரம்
எம் இருவரையும் சுமந்த குதிரை
பயணித்துக் கொண்டிருந்தது.

இரவின் மௌனத்தைக் கலைத்து
நீ பேசுகிறாய்
"இது யாரது குதிரை தெரியுமா?"
நான் மௌனம் காக்கிறேன்
"எங்கள் ராவண மகாராஜாவின்
இளவல் மேகநாதன்
இந்திரஜித்தின் குதிரை
இன்று எங்களை சுமக்கிறது"
என்கிறாய்.

எனக்கும் தெரியும்
இந்திரஜித் வீரன்
பிரமாஸ்திரம் வைணவஸ்திரம்
பாசுபதாஸ்திரம் என
மூன்று தேவர்களின்
மூல ஆயுதங்களை கொண்ட
ஒரே வீரன் அல்லவா?
உலகமே வியக்கும்
மிகச் சிறந்த வீரன்.
துரோகத்தால்
வீழ்ந்தவன்.

குதிரை தென்னவன்
மரவடி கடந்து
வீரம் புதைந்த முள்ளிவாய்க்கால்
மண்ணை முத்தமிட்டது.
நந்திக்கடல் காற்று
எம் மேனி தழுவியது
இன்னமும் மாறாத
எம் மக்களின் ரத்த வாசம்
காற்றின் மூச்செங்கும்
இன்னமும் மாறாத
மரண ஓலத்தின் வீச்சம்.

முழுநிலவு
வானில் பிரகாசித்தது.
நிலவின் முகத்தில்
சில காட்சிகள் வந்து போயின

நியூட்டனின்
மூன்றாம் விதியின்
அரங்கேற்றம்
காட்சியாகியது

உலகத்தெருக்களில்
அகதியாய் அலைந்த
எம் மக்களை விட
மோசமாக
அலையும் தலைவனின்
நிலை
யார் அறிவார்?

**மாதம் முக்கியம்: ஆவணி. 2022**

# ராணியாக வாழ்வது அத்தனை சுலபமல்ல



கவிதா லட்சுமி நோர்வே

வடக்கும் தெற்குமாக
கிழக்கும் மேற்குமாக
குறுக்குமறுக்குமாக
ஓட வேண்டும்

ஒரு ராஜாவுக்காக!

சுவர்களை உடைக்க
வேண்டும்
ஆலோசகர்களைத்
தகர்க்க வேண்டும்
எதிர்வரும்
விற்களையும் வாட்களையும்
வீழ்த்த வேண்டும்
தன் மக்களைக் காக்க வேண்டும்

ஒரு ராஜாவுக்காக!

நான்கு மூலைகளுக்குள்
வீராங்கனையென
முட்டி மோதி, வீழ்ந்து,
ஓடி ஒளிந்து பாய்ந்து,
இறந்து உயிர்த்து,

ஒரு ராஜாவுக்காக!

உலகம் சதுரமல்ல என்பதும்
வாழ்தல் வெறும்
கறுப்பு வெள்ளையல்ல என்பதும்

ஆட்டத்தை விட்டொழித்து
வந்தால் மட்டுமே
புரியக்கூடும்

ராணிக்கும்
மற்றும்
யாவருக்கும்!

## யேர்மனி சுவேற்றா ஸ்ரீ கனகதுர்க்கா அம்பாள் ஆலய தேர்த் திருவிழாவில் இடம்பெற்ற அதிஸ்ட்ட லாபச்சீட்டு !

**பரிசு பெற்ற இலக்கங்கள் இவை:**

| | |
|---|---|
| முதலாம் பரிசுக்குரிய இலக்கம் | 237 |
| இரண்டாவது பரிசுக்குரிய இலக்கம் | 454 |
| மூன்றாம் பரிசுக்குரிய இலக்கம் | 482 |

**ஆலய நிர்வாகத்துடன் தொடர்பு கொள்ளவும்.**





# புலம்பெயர் வாழ்வில் திருமணம் தேவைதானா?



விமல் சொக்கநாதன்
(இங்கிலாந்து)

இங்கு பிரிட்டனில் வங்கிகள் போன்ற மிகப்பெரும் நிறுவனங்களுடன் நீங்கள் Online தொடர்பை ஏற்படுத்தும்போது உங்கள் பெயர், மின்னஞ்சல் முகவரி ஆகியவற்றோடு ரகசிய கடவு வார்த்தை (Secret Password) ஒன்றையும் தெரிவு செய்ய வேண்டும். நீங்களாகவே தெரிவுசெய்த உங்கள் கடவு வார்த்தையை நீங்கள் மறந்து போனால், அதனை உங்களுக்கு நினைவூட்டும் சில கேள்விகளையும் அந்த நிறுவனம் கேட்கும்.

1..உங்கள் அப்பாவை உங்கள் அம்மா திருமணம் செய்ய முன் அவரது கன்னிப் பெயர் என்ன? அம்மாவின் அப்பா பெயர் என்ன? 2. உங்கள் வாழ்க்கைத் துணையை நீங்கள் எங்கே முதலில் சந்தித்தீர்கள்? 3. நீங்கள் முதலில் படித்த பாடசாலை எது?

உங்களைத் தவிர வேறு மூன்றாம் பேர்வழிகளுக்கு இதற்கான பதில்கள் தெரிந்திருக்க முடியாது. உங்கள் அந்தரங்க தகவல்களை பாதுகாப்பதற்கு அந்த வங்கி மேற்கொள்ளும் நடவடிக்கை இது! இதில் இரண்டாவது கேள்வி, வித்தியாசமான ஒரு கலாசாரத்திலிருந்து வந்த எங்கள் தலைமுறையினருக்கு சிரமங்களை ஏற்படுத்தலாம். ஆனால் காதல் திருமணம் செய்து கொண்ட என்னைப் போன்றவர்களுக்கு இது சிரமமாக இருக்காது. சட்டக் கல்லூரி என்றோ, மருத்துவக் கல்லூரி என்றோ, கோயில் திருவிழாவில் என்றோ எழுதியிருக்கலாம். ஆனால் எங்கள் தலைமுறை தம்பதிகள் பலர் தமது வருங்கால வாழ்க்கைத் துணையை முதன்முதலாக சந்திப்பதே மணமேடையில்தான். அப்பா காட்டும் பெண்ணின் கழுத்தில் மறுபேச்சு பேசாமல் தாலிகட்டுவது எங்கள் தலை முறையின் வழக்கம். அதேபோல பெண்களும் அம்மா யாரைக் காட்



டுகிறாரோ அவருக்கு கழுத்தை நீட்டுவது ஒரு தலைமுறை.

தவில் வித்துவான் ஓங்கி அடிக்கும் அந்த கெட்டிமேள ஒலியில் பொதுமக்களின் பேச்சொலி மட்டுமல்ல, மணமகனும் மணமகளும் இந்த கல்யாண மேடைக்கு வரமுன்னர் பிறருடன் வைத்திருந்த ரகசியத் தொடர்புகள், கிசுகிசுக்கள், நடந்த கடலோரங்கள், பாடிய காதல் கீதங்கள் அனைத்துமே மங்கித் தேய்ந்து மறைந்துவிடும்.

திருமணம் வரை மணமக்கள் ஒருவரை ஒருவர் சந்திப்பது முற்றாக இல்லை – பெரியோர் நிச்சயித்த திருமணங்களில். தங்கள் புதல்வி பிறந்த நாள் முதல் பெற்றோரே எல்லாவற்றையும் தீர்மானிக்கும் பொறுப்பிலிருந்து விலகுவதில்லை. திருமணம் பொருத்தும் வேலை வரை தாமாகவே இழுத்துப் போட்டு செய்கிறார்கள். "என் பெற்றோர் எனக்கு திருமண ஒழுங்குகள் செய்கிறார்கள். Why are they looking for a partner for you? Can't you find some one yourself?"

இலண்டனில் படித்து பட்டம் பெற்று பெரிய பதவிகளில் இருக்கும் எமது இளைஞர்கள், யுவதிகள், தத்தம் அப்பா அம்மாவை இந்த திருமணப் பேச்சுக்களில் ஈடுபடுத்துவது பிரிட்டிஷ் ஆண்களுக்கும் பெண்களுக்கும் புரிந்துகொள்ள முடியாத வியப்பாக இருக்கிறது! திருமண வைபவம், மேளதாளம், மண்டப வாடகை உணவு உயவநசபைெ இப்படி எல்லாவற்றையும் கூட்டிக் கழித்து பார்க்கும் போது இந்த ஆடம்பர திருமண விழா தேவைதானா என்ற கேள்வியே இளம் தம்பதிகள் மனதை குடையும் கேள்வியாக இருக்கும்.

Living together (திருமணம் செய்யாமலே ஒருமித்து கணவன் மனைவிபோல வாழ்தல்) இளையவர்கள் மனதை அண்மைக்காலமாக கவர்ந்த ஒரு விஷயமாகும். இது அவசரமாக அவர்கள் எடுத்த முடிவேயல்ல. தங்கள் தோழர்கள் Ram, Siva, Boris, Sulaiman, Gaya, Ranji, யேணயை திருமணமே செய்யாமல் ஒரு சமூகமாக, ஒரு பெரிய குடும்பமாக ஒரே வீட்டில் வாழ்வது மற்ற இளசுகளுக்கு ஒரு முன் உதாரணமாக திகழ்கிறது.

"Niru darling! நாங்கள் Elderly parents தரும் Advice நீங்கள் கேட்பதாக தெரியவில்லை. Joint life வாழும் உங்கட Friends வீட்டுக்கு போறீங்கள் வாறீங்கள். கல்யாணம் செய்வது பற்றி என்ன Decide பண்ணி இருக்கிறீங்கள்?"

"Mummy, I need some more time"

"என்னம்மா இதென்ன Court வழக்கே? You are keeping on asking for more time! Niru".

சைரவின் தாயார் இதைச் சொல்லும்போது அவளது குரல் தளதளத்தது. அவளுக்கும் கணவருக்கும் வயது எழுபதை தொட்டு நின்றது. சைேர இனி கல்யாணம் செய்து ஒரு பேரப்பிள்ளையை தமது கையில் தருவதற்கு வயது 75 ஆகிவிடலாம். இந்த விரக்தி – நிலையற்ற தன்மை அவளது குரலில் தெரிந்தது.

சைர இலண்டனில் பிறந்து வளர்ந்து பட்டம் பெற்றாலும் சிறுவயதில் தாயார் அவளை தமிழ் SchoolYக்கும், Carnatic Music lessonக்கும் கொண்டு போனதால், தன் பெற்றோர் மீதிருந்த அன்பும் மதிப்பும் பன்மடங்கு அதிகரித்திருந்தது. ஆனாலும் அம்மா வற்புறுத்துகிறாள் என்பதற்காக யாரோ ஒரு Spoilt Brat க்கு கழுத்து நீட்ட அவள் தயாரில்லை.

10 ஆம் பக்கம் பார்க்க...




விளம்பரம் அறிமுகம் செய்யும். தரம் அதை நிலைபெறச் செய்யும்.

# Lucky Fly Reisebüro

## Srilanka tour

### இலங்கை சுற்றுலா வசதிகள்!




COLOMBO



**உங்கள் தாயகப் பயணத்திற்கு எமது முழுமையான சேவை!**

யேர்மனியில் இருந்து இலங்கையில் நீங்கள் சென்றடைய வேண்டிய இடம் வரை பாதுகாப்பாக, காலை உணவுடன், சொகுசு வாகனத்தில் செல்வதற்கான சகல ஒழுங்கும் செய்து தருகின்றோம்.

கொழும்பு விமான நிலையத்தில் இருந்து யாழ்ப்பாணம், மட்டுநகர், திருகோணமலை, வவுனியா, கிளிநொச்சி, எங்கு செல்வதாக இருந்தலும் வாகன வசதி செய்து தருகின்றோம்.

தங்குவதற்கு சிறந்த ஹோட்டல் எம்மால் ஒழுங்கு செய்து தரப்படும், அதுமட்டுமன்றி இலங்கையில் நீங்கள் விரும்பும் இடங்களை, குடும்பமாகவோ, குழுக்களாக சென்று பார்க்கவும், எம்மை நாடுங்கள்.




சிறந்த சேவை
என்றால் அது
**lucky fly**



e.mail: info@L-Fly.de | www.L-fly.de

SriLankan Airlines | QATAR AIRWAYS القطرية | Emirates | Gulf Air طيران الخليج

**Mob: 0179 1484 892 | Tel:0234 23 990 32 | Fax: 0234 7945 7171**
**Essener Str.26 44793 Bochum-Germany**




# எந்தமாதிரியான ஆளை எப்படி அணுகவேண்டும் அந்தமாதிரி விபரங்களும் நீங்கள் கொடுத்ததே!

## I agree!

இலவசமாக ஒரு அப்ளிகேஷன்! இதனை எப்படி வேண்டுமானாலும், எப்போது வேண்டுமானாலும், யார் வேண்டு மானாலும் பயன்படுத்தலாம். யாரும் எந்த கேள்வியும் கேற்கமாட்டார்கள். படம் பார்ப்பதுபோல், விளையாடுவதுபோல் பொழுதுபோக்கிற்காக இருக்கும் பலவற்றுள், இதுவும் ஓர் தேர்வு என நாம் நினைத்துக் கொண்டிருக்கலாம். அந்த நினைப்பில் தவறில்லைதான். ஆனால் இந்த அப்ளிகேஷனை எதற்காக நமக்கு இலவசமாக கொடுக்கவேண்டும்? இதனை பொழுதுபோக்கிற்காக நாம் பயன்படுத்துவதால் யாருக்கு என்ன லாபம்? நம்முடைய வீடியோக்கள் மூலம் யாரெல்லாம் வருமானம் பார்க்கிறார்கள்? என்ற பல கேள்விகளுக்கு பதில் தெரிந்து கொள்ளவேண்டிய கட்டாயத்தில் நாம் இருக்கின்றோம்... நாளொன்றில் பதினைந்தாயிரம் கோடிக்குமேல் பயனாளர்கள் “டிஃடோக்“ அப்ளிகேஷஷனை பயன்படுத்துத்துகிறார்கள் என கூறப்படும் நிலையில் சம்பந்தப்பட்ட நிறுவனம் பல கோடிரூபாய்களை வருமானமாக ஈட்டுகின்றது. ஆனால், நாம் இலவசமாகத்தானே இந்த tiktok ஐ பயன்படுத்துகின்றோம் ? இது எப்படி சாத்தியம் ?

தற்போதுள்ள “அமைப்பு“ எப்படி இருக்கிறதென்றால் யாராவது அவர்களாகவே வந்து வலையில் வீழ்ந்தால்“ அவர்களா கத்தானே வந்து வீழ்ந் தார்கள் இதை வைத்து நான் பணம் பண்ண கூடாதா“? என்ற எண்ணம் கொண்டவர்களை அதிகமாக கொண்ட சமூகமாகவே இன்றைய சமூகம் மாறிக்கொண்டிருக்கிறதென்றால் அது மிகையில்லை. என்னை நம்பி இவ்வளவு தரவுகளை (Data) கொடுத்திருக்கிறார்கள் இதை நான் பத்திரமாக வைத்திருக்க வேண்டும் என யாரும் நினைக்கப்போவதில்லை. இவற்றை நிச்சயம் அவர்கள் விலைக்கு கொடுக்கத் தான் போகிறார்கள். இது விலைக்குப்போகிற விஷயம், நம்முடைய datait இன்னொருவர் பயன்படுத்திக்கொள்கின்ற“ datamining“ என்றவோர் indus try இருப்பதே இன்றுவரை நம்மில் பலருக்கு தெரியாமலே இருந்துவருகின்றது. நம்முடைய personalityI அவர்கள் நன்கு உள்வாங்கிக் கொண்டு நமக்கென்று தனியாக ஒரு விளம்பரத்தினை கொடுக்கின்றார்கள் (உதாரணமாக நமக்கு தேவையான பொருட்களை விற்பனை செய்யும் அல்லது நாம் அன்றாடம் பயன்படுத்தும் பொருட்களை விற்பனை செய்யும் நிறுவனங்களிடம் நம் தகவல்கள் விற்கப்படும்). நம்முடைய likes ஒவ்வொன்றையும் அவதானித்து ஒரு தேர்தலையே இவர்களால் மாற்றமுடியும் என்கிற தகவல் இன்றைய தலைமுறையினரில் எத்தனை பேருக்கு தெரிந்திருக்க வாய்ப்பிருக்கிறது?


பிரியா இராமநாதன்
(இலங்கை)

“Data“ என்பது மிகப் பெரிய பொக்கிஷம்,அது வோர் மூலப்பொருள் என்பது இனிமேல்தான் பலருக்கும் புரியப்போகிறது .“என்னுடைய னயவயவை வைத்துக் கொண்டு நீ என்ன செய்கிறாய்?“ என கேட்கப்போகும் காலம் வெகு தொலைவிலில்லை. ஒருவருக்கு அதிகமான likes, comments வருகிறதென்றால் அதுவொரு data. அதை Trace செய்து வெளிநாடுகளுக்கும், தனியார் மற்றும் விளம்பர நிறுவனங்களுக்கு விற்று பணம் சம்பாதிக்கிறார்கள். டேட் டாக்களை விலைக்கு வாங்குபவர்கள்,எந்தமாதிரியான ஆளை எப்படி அணுகவேண்டும், எந்த மாதிரியான ஆளை எப்படி அணுக




வேண்டும் இந்தமாதிரி விபரங்களும் நீங்கள் கொடுத்ததே! இந்த தலைமுறைக்கு என்ன கொடுக்கவேண்டும், என்ன கொடுக்கக்கூடாது எனவும் தீர்மானிக்கின்றார்கள். இவர்கள் செய்வதென்ன? மக்களுக்கு மிகவும் பிடிக்கக்கூடிய,

28 ஆம் பக்கம் பார்க்க...



விளம்பரம் அறிமுகம் செய்யும். தரம் அதை நிலைபெறச் செய்யும்.


Jaffna SUPER.MARKT
Jaffna Super markt
Lebensmittel aus Asien, Afrika,China und Orient
எம்மிடம் நம்பி வாங்கோ!.. சந்தோமாகப் போங்கோ!!..
ANNIVERSARY CELEBRATIONS
3rd ANNIVERSARY
3 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு
மாபெரும் மலிவு விற்பனை!
01.09.2022 முதல் 15.09.2022 வரை
From Münster Hbf only 4 minute working distence
வாருங்கள்! தரமான பொருட்களை!! மலிவாகப் பெற்றுச் செல்லுங்கள்!!!
3 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு 90€ க்கு கொள்வனவு செய்பவர்களுக்கு ஒரு Kings (900gm) மிளகாய்த்தூள் அன்பளிப்பு!
பசுமையான மரக்கறி வகைகள்
Mon- Sat 9.00-20.30
பசுமையான மரக்கறிகள், கடல் உணவுப் பொருட்கள் மற்றும் மளிகைப் பொருட்கள் அனைத்தும் தரமாகவும், மலிவாகவும் என்றும் பெற நாடுகள்
எமக்கு அமோக ஆதரவுதரும் அன்பான மக்களுக்கு எமது மனமார்ந்த நன்றி!
Tel:0179 2310 560 Wolbecker Str.16a 48155 Münster (Eing... Bremer Platz neben Parkhaus Ausgänge)



# நீரிழிவினால் ஏற்படும் கண்பார்வைப் பாதிப்புக்கள்

“எனக்கு கண் நல்லாத் தெரியுது. நான் ஏன் கண் டாக்டரட்டை போக வேணும்” என அவர் ஆச்சரியப்பட்டார். அவர் ஒரு நீண்டகால் நீரிழிவு நோயாளி. வீட்டில்குளுக்கோமீற்றர் வைத்திருக்கிறார். சீனியின் அளவைப் பார்த்து திருப்தியடைந்து விடுவார்.

அவரது HbA1C அளவானது 8.5 ல் இருந்தது. HbA1C என்பது ஒருவரது சீனியின்அளவு சென்ற மூன்று மாதங்களாக எந்த நிலையில் இருந்தது என்பதைக் கணிக்கும்முறை என்பதை நீங்கள் அறிவீர்கள். இது 6.5 என்ற அளவிற்குள் இருக்க வேண்டும்.

நீரிழிவானது பல்வேறு உறுப்புகளையும் பாதிக்கிறது. நீரிழிவினால் சிறுநீரகம்பாதிப்புறுவதை பலரும் அறிவார்கள். அதே போல தங்கள் பார்வைத் திறனையும் மோசமாகப் பாதிக்கக் கூடியது என்பதைப் பெரும்பாலானோர் உணர்ந்து

கொள்ளவதில்லை. நீரிழிவு நோயால் பார்வை பல்வேறு வழிகளில் பாதிப்புறலாம்.

## நீரிழிவினால் விழித்திரைப் பாதிப்பு

கண்களின் விழித்திரையில் (Retina) ஏற்படும் பாதிப்பு மிக முக்கியமானது. விழித்திரையானது Rod and cones ஆகிய கலங்களால் நிறைந்திருக்கிறது. நாம் பார்க்கும் போது எமது விழித்திரையில் ஒளியாக விழும் பிம்பத்தை மின்அதிர்வுகளாக மாற்றி, பார்வை நரம்பு (Optic Nerve) ஊடாக மூளைக்கு அனுப்பும் பணியை இவை செய்கின்றன. உடவிலுள்ள எல்லாக் கலங்களும் போலவே விழித்திரைக் கலங்களுக்கும் ஒட்சிசனும் போசனைப் பொருட்களும் தேவை. இவை இரத்தக் குழாய்கள் ஊடாக வரும் இரத்தத்திலிருந்தே கிடைக்கிறது. நீரிழிவு நோயானது இரத்தக் குழாய்களைப் பாதிப்பதை அறிவீர்கள்.

அதுபோலவே விழித்திரைக் குருதிக் குழாய்களையும் பாதிக்கும். நீரிழிவு நோயுள்ள எவருக்கும் விழித்திரைப் பாதிப்பு ஏற்பட வாய்ப்புண்டு. இருந்தபோதும் நீண்ட காலமாக நீரிழிவு உள்ளவர்களுக்கு பாதிப்பு ஏற்படுவதற்கான சாத்தியம் அதிகமாகும்.

அமெரிக்காவில் நீரிழிவு உள்ளவர்களில் 40 முதல் 45 சதவிகிதமானவர்கள் இதனால் பாதிக்கப்பட்டிருப்பதாக தெரிகிறது. எங்கள் நாட்டிலும் இதற்குக் குறையாது என்றே சொல்லத் தோன்றுகிறது. இருந்தபோதும் இங்குள்ள பெரும்பாலான நீரிழிவு நோயாளர்கள் கண் மருத்துவரை அணுகுவதில் அக்கறை காட்டாது இருப்பதால் தாக்கத்தின் வீச்சு வெளிப்படையாகத் தெரியாது இருக்கிறது.



டாக்டர் எம்.கே.முருகானந்தன்
MBBS (Cey),DFM (Col),FCGP (Col)
குடும்பவைத்தியர்

## எத்தகைய பாதிப்புகள் ஏற்படும்?

பாதிப்புற்ற விழித்திரை இரத்தக் குழாய்களிலிருந்து இரத்தம் கசியலாம். இது கண்ணின் நடுப் பகுதிக்குள் பொசிந்து



வந்து பார்வையைத் தெளிவற்றதாக்கும். இரத்தம் போலவே திரவக் கசிவும் ஏற்படுவதுண்டு. இது பொதுவாக மக்கியுலா என்ற பகுதியில் சேர்ந்து அதை வீங்கச் செய்யும். இதை macula edema என்பார்கள். கூரிய பார்வைக்கு அவசியமான மக்கியுலாவில் இவ்வாறு வீக்கம் ஏற்பட்டால் பார்வை மங்கும். நீரிழிவு நோய் மற்றும் கொலஸ்டரோலால் இரத்தக் குழாய்கள் அடைபடலாம். அடைபட்டவற்றை ஈடுசெய்வதற்காக புதிய இரத்தக் குழாய்கள் வளரும். இதுவும் பார்வைப் பாதிப்பை ஏற்படுத்தும். இவ்வாறு நடப்பதை Proliferative retinopathy என்பார்கள்.

## அறிகுறிகள்

ஆரம்ப கட்டத்தில் நீரிழிவு விழித்திரை நோயானது எந்த ஒரு அறிகுறிகளையும் வெளிப்படுத்தாது. வலியோ வேதனையோ பார்வைக் குறைபாடோ நோயாளிக்கு இருக்காது. ஆயினும் நோயின் தாக்கம் அதிகரிக்கும்போது பார்வை சற்று மங்கலாகும்.

இரத்தக் கசிவு ஏற்படும்போது கரும் புள்ளிகள் பார்வையில் தோன்றலாம். ஆவை தானகவே மறையவும் கூடும். ஆயினும் மீண்டும் வரும். கடுமையாக குருதிக் கசிவு இருந்தால் பார்வையில் பெரும் பகுதி படத்தில் காட்டியபடி கருமை படர்ந்து மூடக் கூடும். எனவேதான் நீரிழிவு நோயுள்ளவர்கள் அறிகுறிகள் தோன்றும் வரை காத்திருக்காது வருடம் ஒருமுறையாவது கண் மருத்துவரைக் காண்பது அவசியம்.

## சிகிச்சை

சிகிச்சையைப் பொறுத்தவரையில் நீரிழிவை பூரண கட்டுப்பாட்டிற்குள் வைத்திருப்பதேமிக முக்கியமானது. நீரிழிவை கண்காணிக்கும் தனது மருத்துவரை 1முதல் 3மாதத்திற்கு ஒரு முறையும், கண் மருத்துவரை வருடம் ஒருமுறையாவது கலந்து ஆலோசிக்க வேண்டும்.

நோயின் தாக்கம் அதிகமாகும்போது லேசர் சிகிச்சைஅளிப்பார்கள். இரத்தம் அதிகம் கண்ணினுள் கசித்திருந்தால் அங்குள்ள இரத்தம் கலந்த திரவத்தை அகற்றிவிட்டு வேறு உப்புத்திரவத்தை மாற்றீடு செய்வதுண்டு. இதனை vitrectomy என்பார்கள் நீரிழிவால் வேறு கண் பாதிப்புகள்:

30 ஆம் பக்கம் பார்க்க...







விளம்பரம் அறிமுகம் செய்யும். தரம் அதை நிலைபெறச் செய்யும்.

# மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட நாவலப்பிட்டி மாணவர்களுக்கு இங்கிலாந்து M & M family நிறுவனத்தினர் உதவி




வெற்றிமணியூடாக, இங்கிலாந்து M & M family நிறுவனத்தினர் உதவி

மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட நாவலப்பிட்டி கதிரேசன் இந்து மகளீர் கல்லூரி மாணவர்களுக்கு அதிபரினூடாக பாசாலை ஸ்கூல் பாக்ஸ் மற்றும் சொக்ஸ், என்பன வழங்கப்பட்டன. இதன் மூலம் 50 மாணவர்கள் பயன் பெற்றனர். இவ் உதவி வெற்றி மணியூடாக, இங்கிலாந்து M & M family நிறுவனத்தினர் உதவினர்.

இதனை சிறப்பாக செய்து முடித்த வேருக்குநீர் உறுப்பினர் பிரதாவிற்கு நன்றி. பாடசாலை அதிபர் திருமதி.வனஜா மிகுந்த நன்றிக ளைத் தெரிவித்தார். வகுப்பு நேரம் என்பதால் வகுப் புக்கு இடையூறு செய்யாமலும் தனித்தனியாக மாண வரை அழைத்து பொருட்களை கொடுத்தார்கள். இன்றை நாள் மிக திருப் திகரமாக 16.08.2022 நிறை வடைந்தது.

**நாவலப்பிட்டியில் இருந்து பிரதா**



வெள்ளத்தினால் பாதிக்கப்பட ஒரு பகுதி பாடசாலை மற்றும் வீடுகள்



---

05 ஆம் பக்கத் தொடர்ச்சி...

## புலம்பெயர் வாழ்வில் திருமணம் தேவைதானா?

Hindu Marriage என்பது Friends போல ஒன்றாக வாழ்வது என்பது Tamil Boysக்கு ஏன் புரிவதில்லை?

திருமணம் முடிந்தவுடன் வீட்டின் Ownership, Bank Account என்பன தமது பெயரில் மாற்றப்படவேண்டும் என்று தமிழ் Grooms ஏன் கேட்கிறார்கள்? Grooms அல்ல Groomsஇன் Parents ஏன் வற்புறுத்துகிறார்கள்? தன் Friendsக்கு திருமணம் என்ற பெயரில் நடந்த நாடகம், அதனைத் தொடர்ந்த Horror Stories Niru வுக்கு வயிற்றைக் கலக்கி அச்சுறுத் தினளூ வயிற்றோட்டம் வரச் செய்தன.

இந்த Horror Stories இல் இருந்து தான் தப்பவேண்டும். அப்பா அம்மாவுக்கு மகிழ்ச்சியைக் கொடுக்க வேண்டும், ஒரு பேரப்பிள்ளையை தான் கொடுக்க வேண்டும்! எப்படி இதை செய்து முடிப் பது என்று இரவு முழுவதும் யோசித் தாள் நிரு. அதிகாலை நேரம், ஞானோத யம் வந்ததுபோல எழுந்து Bathroom போனாள். சுவாமி அறையில் வினைகள் தீர்க்கும் விநாயகனை வணங்கினாள்.



காப்பி அருந்திவிட்டு IVF Clinic க்கு Phone செய்து Appointment வைத் தாள். தான் யார் என்று நிரூபித்து Pass port வேலை விபரங்களை கொடுத்தாள். னுநிழளவை பணம் செலுத்தினாள்.

தன் பெற்றோர் பற்றியும் எப்படியான மகவு வேண்டும் என்றும் விரிவாகச் சொன் னாள். நான் Sri Lankan Tamil. நீங்கள் தெரிவு செய்யும் Donor சிங்களவரோ, தமிழரோ, முஸ்லிமோ எனக்கு பரவாயி ல்லை. ஆனால், அவர் தோற்றம் / குழந்தையின் தோற்றம் மிக முக்கியம் என்று வலியுறுத்தினாள். "மும நிரு! நீங்கள் போகலாம். உங்கள் தேவைகள் இன்னும் ஒரு வாரத்தில் நிறைவு செய்ய முடியும் என எதிர்பார்க்கிறோம்!" என்று மருத்துவர் சொன்னதும் மகிழ்ச்சியடைந்தாள். நிறை வாக உங்கள் விபரங்கள் Donorக்கோ, Donorஇன் விபரங்கள் உங்களுக்கு தெரிவிக்கப்படமாட்டா.

நன்றி சொல்லிவிட்டு புறப்பட்டாள் நிரு. இரண்டு வாரங்களில் மருத்துவரின் சிகி ச்சை சிறப்பாக நிறைவுபெற்றது. கைநி றைய சம்பளம், பெரிய கார், நீண்ட விடுமுறை என்று வாழ்க்கை இனிமையாக செல்லும்போது, கணவன் என்ற பெயரில் ஒரு தோட்டத்து 'கண்காணி' அவசியமா? அவனுடைய தொல்லை போதாது என்று பொறாமையே உருவாய் கொண்ட அவனது அம்மாவையும் சகோதரிகளையும் தான் சகித்துக் கொள்ளத்தான் வேண்டுமா?

உறவுகள் முறிவடைந்தால், நீதிமன்றத் தில் விவாகரத்து கேட்பதும், அதற்காக பல மாதங்கள் காத்திருப்பதும் நிருவுக்கு கசந்தது. இந்த தொல்லைகளிலிருந்து விடுதலை பெறவே அவள் ஐஏகு முறையை தெரிவுசெய்து குழந்தைபெற ஆயத்தமாகி றாள். ஓரினச் சேர்க்கையில் வாழும் இரு பெண்கள்கூட குழந்தை பெற்றுக் கொள்ள இந்த IVF முறையையே தெரிவு செய்கிறார்கள். ஆனால் நிருவுக்கு ஓரினச் சேர்க்கையும் இல்லை. சாமான்ய ஆண் உறவுகளும் இல்லை. அப்பா அம்மாவுடன் அன்பு மகளாக வாழ்ந்து, நண்பர்களுடன் கூட்டாக வாழ்ந்து காதல் / கல்யாணம் எல்லாம் அவளிடமிருந்து விடைபெற்றுக் கொண்டன. ஆனால் நல்ல மருத்துவ முன்னேற்றங்களால் குழந்தைப்பேறை தான் அடைய நினைத்து ஆயத்தம் செய் தாள்.

நிரு இப்போது ஒரு கர்ப்பிணி. கருவுற்று மூன்று மாதங்கள். குழந்தைக்கு தந்தை யின் பெயராக தன் பாட்டனாரின் பெயரையே வைப்பது என்று நிரு தீர்மானித்தாள். தன்னை பெற்றெடுத்து அன்புடன் ஆளாக் கிய அப்பா அம்மாவுக்கு தனது சிறிய பிரதி யுபகாரமாக இந்தப் பேரப்பிள்ளையை நிரு வழங்கப் போகிறாள். இது கட்டுரையாளரின் கற்பனைக் கதை அல்ல.




விளம்பரம் அறிமுகம் செய்யும். தரம் அதை நிலைபெறச் செய்யும்.



# காதல் திருவிழா

## என்டை ஆளைக் கண்டனியே!

சாதகம் பொருந்தீட்டுதாம் அடுத்தது என்ன மாதிரி எண்டு புரோக்கர் கேக்க, “ தம்பி ஒருக்கா பொம்பிளையை பாக் கோணுமாம்“ எண்டு மாப்பிளையின்டை அம்மா சொன்னா. கலியாணம் எண்டு பேசத் தொடங்கின உடனயே பேசிறதை குறைச்ச தம்பி, நான் எப்ப அம்மாவைக் கேட்டனான் எண்டு யோசிக்க, “ அதுக்கென்ன வெள்ளிக்கிழமை நல்லூரில காலமை பூசையில பாப்பம்‘ எண்டு முடிவாகிச்சுது. ரெண்டு பெண்டாண்டிக் காரரா இருந்தாலும் நல்லூரான் நல்லது செய்வான் எண்டு பெண்பார்க்கும் படலம் பொதுவா இங்க தான் நடக்கும்.

அப்ப கொழும்பில Majestic City மாதிரி யாழ்ப்பாணத்தில எல்லாப் பெடியளுக்கும் லேசியா பெட்டைகளை பாக்கிறதெண்டால் நல்லூர் தான். கொடியேத்தத்தில பாத்து மஞ்சத்தோட கேட்டு திருக்கலியாணத்தில ஒப்பேத்தின கதைகள் சில இருக்கு. பாக்காமல் காதல், பாத்தவுடன் காதல்,படித்ததோட காதல், பழகிப் பாத்து காதல், எண்ட மாதிரி நல்லூரில பாத்து ஆனால் பேசாமலே ஒப்பேறிற காதல் தான் கனக்க.

காலமை கோயிலுக்கு வாற பிள்ளைகள் அநேமா அம்மாமாரோட தான் வருவினம். குறூப்பா வாறதுகள் பின்னேரம் தான். குறூப்பா வாறதில ஒண்டைப் பாக்க வெளிக்கிட்டால் அதோட கூட வாறது எங்களைப் பத்தி ஏதாவது அள்ளி வைச்சு கவித்துப் போடும்.இவளவை எல்லாம் சாணக்கியச் சகுனிகள், “ ஏற்கனவே இருக்காம் , இவன் எல்லாரையும் பாக்கிறவன், போன நல்லூரில இன்னொண்டுக்குப் பின்னால திரிஞ்சவன்” எண்டு சொல்லி முளைக்காமலே கிள்ளிப் போடுங்கள்.



ஆனால் பெடியள் எல்லாம் ஆம்பிளை அன்னங்கள். “ மச்சான் உன்டை ஆளைக் கண்டனான் இண்டைக்கு சிவப்பு சாறியோட, சாமிக்குப் பின்னால தான் வாறா, அம்மாவைக் காணேல்லை ஆரோ ஒரு அக்கவோட தான் கண்டனான் “ எண்டு GPS location accurate ஆ தருவாங்கள். இதை எல்லாம் சொல்லீட்டு வெளிக்கிட முதல் “ என்டை ஆளைக் கண்டனியே” எண்டு ஏக்கத்தோட கேக்கிறவனுக்கு இல்லை எண்டாம, “ மச்சான் எப்பிடியும் சங்கீதக் கச்சேரிக்கு வருவா கண்டு பிடிக்கலாம்” எண்டு நம்பிக் கையை குடுத்திட்டுப் போவான் மற்றவன்.

### சாமியே நிண்டு கேக்கிற பத்மநாதனின்டை நாதஸ்வரம்

என்னைப் பொறுத்தவரை நல்லூர்க்கந் தன் காதல் கந்தன். நீளமும் அகலமுமான வீதி, இடது பக்கம் ஆம்பிளைகள் வலது பக்கம் பொம்பிளைகள் எண்டு பாக்கிறதுக்கு சுகமான segregation திரும்பிப் பாத்து யாரிட்டையும் மாட்டுப்படாம நேராவே பாக்க வசதியா சாமியைப் பாத்து நடக்கிற வழமை, அடிக்கடி சாமியை நிப்பாட்டி வைக்கிற மண்டபப்படி, சாமியே நிண்டு கேக்கிற பத்மநாதனின்டை நாதஸ்வரம் எண்டு கண்ணோடு கண்ணை நோக்க எல்லா வசதியும் முருகன் செய்து தருவான்.



Dr.T. கோபிசங்கர்
(யாழ்ப்பாணம் அரச வைத்தியசாலை)
இலங்கை

ஒரு பிள்ளையப் பாத்து ஒப்பேத்திறது எண்டால் அது கொஞ்சம் பெரிய வேலை. ஆளைப் பாத்து select பண்ணிறதே கஸ்டம். இண்டைக்குப் பாத்து இதுதான் எண்டு முடிவெடுத்துட்டுப் போக அடுத்த நாள் என்னுமொண்டு நல்லதாத் தெரியும் இல்லாட்டி முதல் நாள் பாத்தது ஏற்கனவே book பண்ணீட்டாங்களாம் எண்டு ஏக்கங்கள் ஏமாற்றங்களாகும். இதை எல்லாம் தாண்டி சரியானதைக் கண்டுபிடிச்சு பிறகு எந்த டியசசநைச ஆல உள்ள வாறது, எங்க சைக்கிள் விடிறது, எங்க செருப்பு விடிறது, எத்தினை மணிப்பூசைக்கு வாறது, ஆரோட வாறது, உள்வீதி மட்டும் சுத்துமா வெளிவீதியும் சுத்துமா திரும்பிப் போகேக்க எங்க கச்சான் வாங்கிறது, இசைக் கச்சேரி கேட்டிட்டுப் போகுமா கேக்காமப் போகுமா எண்டு நிறைய intelligence report எல்லாம் எடுத்திட்டுத் தான் வேலை தொடங்கிறது.

முதல்ல கொஞ்சம் கொஞ்சமா பின்னால போய், அதுகும் அவைக்குத் தெரியாமப் போய், அதுக்குப் பிறகு கொஞ்சம் தெரியிற மாதிரிப் போக வெளிக்கிட, பிள்ளைக்கு தெரியவர முதல் அம்மா கண்டுபிடிச்சு முறைச்சுப் பாக்க பல காதல் மொட்டுக்கள் கண்ணகி அம்மாக்களின் கண் பார்வையிலேயே கருகிப்போகும். அதோட நாங்கள் பாக்கிறதை கண்டுபிடிச்சு எங்களைத் திரும்பிப் பாக்காமல் அம்மாக்களிடம் காட்டிக்கொடுக்கப்பட்டு காணாமல் போன காதல்களும் உண்டு. இதையும் தாண்டி புனிதமாகிறது சில love வுகள் தான். பின்னால

28 ஆம் பக்கம் பார்க்க...



விளம்பரம் அறிமுகம் செய்யும். தரம் அதை நிலைபெறச் செய்யும்.


INNENSTADT WEST
தமிழர் அரங்கம்
Kulturbüro
Stadt Dortmund Kulturbetriebe
DORTMUND
தமிழர் தெருவிழா 2022
Straßenfest der Tamilen
02.09.2022
FR. 16:00 - 00:00
03.09.2022
SA. 11:00 - 00:00
04.09.2022
SO. 12:00 - 19:00
Park der Partnerstädte
Bundesstraße 54
Bundesstraße 54
westentor
Rheinische Str.
3 நாட்கள்
வெள்ளி - சனி - ஞாயிறு
Dortmunder U - Park der Partnerstädte
Gemeinsam in Vielfalt Der Integrationsrat
VMDO
samo.fa
Integrationsagentur der Stadtteil-Schule Dortmund e.V.
TKD
SIVANDIGITAL
ortel MOBILE
ஊடக அனுசரணை
வெற்றிமணி
அகரம்
தமிழ் ரைம்ஸ் TAMIL TIMES
IBC தமிழ்
Lankasri
ETR
0151633 633 33 | 0157 370 50 110 | 0179 26 30 317 | 0151 279 909 90

# ஆரத்தழுவுதல் அமரநிலையென்று, அறிந்து தந்த பாரதியின் மொழிவரமே நம் தவமாகட்டும்

செவ்விது செவ்விது காதல் எனச் செந்தமிழ் தேனுறு கருத்தினால் காதல் கருவிற்கு கற்பகத் தருவானவன் பாரதி பஞ்ச பூதங்களில் மேலானதாய்க் காற்றினைக் கருதும் என் கற்பனைச் சிறகுகள் காதலைக் காற்றிற்கு ஒப்பிடத் துடிக்கிறது. மெல்லத் தீண்ட மேனி சிலிர்க்கும் காட்சிக்கு அப்பாலான உருவற்ற உணர்வு காற்றும் காதலும்

**"தீர்த்தக் கரையினிலே – தெற்கு மூலையில்**
**செண்பகத் தோட்டத்திலே**
**பார்த்திருந்தால் வருவேன் –**
**வெண்ணிலாவிலே**
**பாங்கியோ டென்று சொன்னாய்"**

கண்ணிற்கு எட்டிடாது கண்ணாம்பூச்சியாடி களவாடவல்ல காற்று செண்பகத் தோட்டத்து நறுமலர்களின் மதன வாசனையை நாசிக்குள் ஊசி போல் ஏற்றும் நாரத முனியோ? தென்றலோடு தீப்பொறியான மலர்வாசனை, சுட்டெரித்த உள்நாட்டுக் கலவரத்திற்கு, மேலும் விஷமாக்க இராத்திரி இருள் சேனைப்படையாகிறது. இரவின் விலாசத்தை உறுதி பகர்க்கும் இரு சொற்களாய் வெண்ணிலாவிலே, தெற்கு மூலையிலே எனக் கவி தீட்டியுள்ளான். கிழக்கிலிருந்து மேற்கு நோக்கிய நிலவின் நளின பயணத்தில் தெற்கு ஓர் அர்த்த ஜாமமாய் கூடக் கருதலாம்.

**"மோனத் திருக்குதடி –**
**இந்த வையகம்**
**மூழ்கித் துயிலினிலே'**
**மேலும் இதற்கு சான்று சேர்க்கிறார்**
**நிசியின் நிசப்தத்திற்கு**

காற்றைத் தொட்டு, விண்ணைக் கண்டு, மண் மீதுலவும் பாரதி நீரோடு இணையும் வகையில் தீர்த்தக் கரையினிலே என்றும் நெருப்போடு நெகிழும் வனப்பில் மேனி கொதிக்குதடி என்றும் கூறுகிறார். பஞ்ச பூதங்களின் பங்கு நம் உள்ளும் புறமும் நின்றாட, உள்ளும் புறமும் உள்ளதெல்லாம் ஒன்றாகிப் பாயும் வெள்ளமாய் நிரம்பும் காதலிற்கும், வெறிப்புறத்தான பஞ்சபூதங்கள் காதலுணர்விற்குத் தூண்டும் கருவியாக




ஐம்பொறிகளிடத்து ஐம்பூதத் தாக்கம் நிகழும். கூடிக் கலந்துலவும் வேளை ஸ்நேகம் தரும் இயற்கை, விட்டுப் பிரிந்துழலும் போது எதிரியாகிறது.

அவ்வாறாக இயற்கையின் இன்பமடியில் எங்கு காணினும் என்னையே பார்த்திருப்பாய், நான் மட்டும் வந்தால் கனவென்று கருதிடுவாய். ஆதலால் நான் கனவாய் கானல் காட்சியாய் வரவில்லை நிஜமாய் வந்துள்ளேன் என்று ஊர்ஜிதப்படுத்தி என் மாயக் கண்ணிற்கு விளக்கம் தர தோழியோடு (பாங்கி) வருவேன் என்றாள்.

**"வார்த்தை தவறி விட்டாய் –**
**அடி கண்ணம்மா**
**மார்பு துடிக்கு தடீ!**
**பார்த்த விடத்திலெல்லாம் –**
**உன்னைப் போலவே பாவை தெரியுதடீ!**

வார்த்தை தவறிவிட்டாய், ஆனால் நீயோ அங்கு வரவில்லை. வீரத்தமிழ் பேசி பொய்யுரையாத பெரும் தெய்வம் நீ வாராது போகும் வண்ணம் எவ்வாறான துன்பம் உனக்கு நேர்ந்ததோ என்றெண்ணி என் மார்பு துடிக்குதடி என்கின்றான். உடல்வலியும், மனக்கலியும் என் இரு கண்களில் பட்டுத் தெறிக்கப் பார்த்த இடத்தில் எல்லாம் கண்ணம்மாவின் உரு தெரியும் மயக்க நிலை உணர்கின்றான்.

கண்ணம்மாவின் நினைவு மதுவில் தோய்ந்த காதலனை காமன் தன் விரகக் கணையால் தாக்க மன்மத மலராளி மேலும் மையல் வளர்த்து தலை சுற்றி மேனி கொதிக்கும் அனலாகிறது.

**"மேனி கொதிக்குதடி –**
**தலை சுற்றியே**
**வேதனை செய்குதடி!**
**வானில் இடத்தையெல்லாம் –**
**இந்த வெண்ணிலா**
**வந்து தழுவுது பார்!**

விண்ணையும் மண்ணையும் ஏக சுகமாய் சுகிர்க்கும் பாரதி இயற்கைச் செருக்கில் ஆண், பெண் தன்மை தேடும் அதியுன்னத ரசனைக் கலை நாடுகிறான். கரு வண்ண வான



கலாசூரி
திவ்யா சுஜேன்
(இலங்கை)

மகனை, வெண்ணிலாப் பெண் தழுவி, இருள் கிண்ணத்துள் ஒளிமது நிரப்புகிறான். அது போல உனைக் காணாது இருளான கரு வான மொத்த என் மனவெளியில், தூய்மைச் சுடரனைய வெண்ணிலா போல் நின் நினைவொளி தழுவிப் படர்ந்து நீள்கிறது என்கிறான். உணர்ச்சிக் கொதிப்பை வார்த்தைகளுக்குள் ஊற்றி மொழியாழம் கொண்டு மெய்யாளும் கவிஞன் மேலும் தொடர்கிறானர். எந்நேரமும் மையல் தரும் நின் நினைவில் துவழும் நான் உன் தீண்டலைப் பிரிந்த இந்நிலை நரகத்துழலுவதாகிறது என்கிறார்.

**"கடுமை யுடையதடீ! ஏந்த நேரமும்**
**காவலுன் மாளிகையில்**
**அடிமை புகந்த பின்னும் –**
**எண்ணும் போது நான்**
**அங்கு வருவதற்கில்லை"**

நீ வசிக்கும் மனை எனவும் பொருள்படும் அவ்வேளை நின் மனம் எனும் மாளிகை என்றும் எண்ணலாம். அகத்திடை ஆச்சார வழக்கங்களை கட்டி வைத்துள்ளாய் அது பெரும் காவல் அமைகிறதோ?

நின்னிடத்தே சரண் புகந்து அடிமையான பின் கூட எண்ணும் போது அவ்விடத்தே நான் வரமுடியவில்லையே என வருந்துகிறான். காதலிக்கு சேவகனாய், அடிமையாய், காதலைப் பணிந்து கொண்டாடும் பாங்கு பாரதியின் அதியுன்னத அறிவு, தன்னை முற்றாக இழந்து தாம் எனும் தன்மை மறக்கும் நிட்சய யோக மார்க்கமாய் அமைக்கிறான் அவன் காதலை அவ்வண்ணம் காதலி எண்ணுவதையெல்லாம் ஓர் அடிமை போல் இருந்து அன்பினால் கட்டியாளும் வண்ணம் உன்னுள் நான் புகுந்த பின்பு கூட நீ எனை எண்ணும் வேளை அங்கு நான் வாராது நிற்கிறேனே. உனக்கு வேண்டும் என்பதை பூர்த்தி செய்ய முடியாது பாவியாகிறேனே என வருந்துகிறான். சமுதாய வழக்கங்களை எண்ணி சற்று கொதிக்கிறான். ஆன்மாக்களை அடக்கி ஆள எண்ணம் கொண்ட சமூக காவல்களை பொறுக்கவில்லை எனகிறான். எப்பிழையும் செய்யாத உத்தம அரசி அவள். எதற்கு வெட்கி வருந்த வேண்டும். இத்தடைகளை உடைத்தெறியும் அதிகாரம் உள்ளவள் என்கிறார்.

30 ஆம் பக்கம் பார்க்க...




விளம்பரம் அறிமுகம் செய்யும். தரம் அதை நிலைபெறச் செய்யும்.


AJ
ENTERTAINMENT
2023
BIGGEST TAMIL CONCERT
! STAY TUNED !
@A.J.ENTERTAINMENTS

# தமிழர்களுக்குச் சொந்தமான வெல்கம் விகாரை எனும்



# இராஜராஜப்பெரும் பள்ளியின் வரலாறு

திருகோணமலையில் கன்னியாவை அடுத்து பெரியகுளம் என்னுமிடம் அமைந்துள்ளது. இங்குதான் பழமை வாய்ந்த வெல்கம் விகாரை எனும் நாத னார் கோயில் அல்லது இராஜ ராஜப் பெரும்பள்ளி காணப்படுகிறது.

இது பற்றிய பேராசிரியர் இந்திரபாலா, பேராசிரியர் பரணவிதான, பேராசிரியர் பத்மநாதன் ஆகிய மூன்று முக்கிய பேராசிரியர்களின் குறிப்புக்கள் மூலம் பல முக்கிய விபரங்கள் வெளிப்படுகின்றன. வெல்கம் விகாரை என தற்போது இவ்வி டம் அழைக்கப் பட்டாலும் இதன் பண் டைய பெயர் ஓர் தூய தமிழ்ப் பெயராகும்.

**என்.கே.எஸ்.திருச்செல்வம்**
வரலாற்று ஆய்வாளர் (இலங்கை)

இது பண்டைய காலத்தில் வெல்காமம், வெல்கம் வேரம் எனவும், சோழர் கால த்தில் இராஜராஜப் பெரும்பள்ளி எனவும் அழைக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் தமிழ் பௌத்தர்கள் இருந்தார்கள் என்பதும், இது தமிழ் பௌத் தருக்குச் சொந்தமான தலமாக இருந்து ள்ளது என்பதும், அவர்களின் முக்கிய தலமாக ராஜராஜப் பெரும்பள்ளி எனும் வெல்கம் வேரம் விளங்கியுள்ளது என் பதும், திருகோணமலைப் பிராந்தியத்தி லே பொலநறுவைக் காலத்தில் வாழ்ந்த தமிழரில் கணிசமான தொகையினர் பௌத்தர்கள் என்பதும், தமிழ்நாட்டில் தமிழ் பௌத்தரின் தலங்கள் எல்லாம் முற்றாக அழிந்து போயுள்ள நிலையில் இலங்கையில் தமிழ் பௌத்தரின் அடை யாளச் சின்னமாக இடிபாடுகளுடனா வது எஞ்சியிருக்கும் ஒரே ஒரு தலமான வெல்கம் வேரம் எனும் இராஜராஜப் பெரும் பள்ளி காணப் படுவதும் மிக முக்கிய விடயங்களாகும்.

இத்தலத்தில் இருந்தவர்கள், இதற்குத் தானங்கள் வழங்கிய வர்கள் அனைவரும் தமிழ் பௌத்தர்களாவார். இத்தமிழ் பௌத் தரின் பள்ளியைக் கட்டியவர்களும் தமி ழர்களே.அதாவது சோழர்கள். இலங்கை யை சோழர் ஆட்சிசெய்த காலத்தில் இராஜேந்திரச் சோழனால் கட்டப்பட்டு அவனின் தந்தையான இராஜஇராஜ சோழனின் பெயர் சூட்டப்பட்டு சீரும் சிறப்புடனும் விளங்கியது. இங்குள்ள சோழர் காலக் கல்வெட்டுக்களில் தானம் செய்தவர்களின் பெயர்கள் பொறிக்கப் பட்டுள்ளன. இவர்கள் தறியணன் பூவன தேவன், அமுதன் சாத்தான், கண்டன் யக்கன் ஐவரின், பாத்தரவித ராமன் ஆகி யோராவார்.இவர்கள் அனைவரும் தமிழ் பௌத்தர்களே.

1929 ஆம் ஆண்டு தொல்பொருள் திணைக்களம் இப்பகுதிக்கு வந்து ஆய்வுகள் மேற்கொண்ட போதே இது தமிழ் பௌத்தர்களுக் குரிய தலம் என்பதை சிங்கள பௌத்தர்கள் அறிந்து கொண்டனர். இதன் காரணமாகவே இத்தலத்தை தமிழர்கள் கைப்பற்றி விடுவார்கள் எனும் அச்சத்தில் சில அரசி யல் சக்திகளின் ஆதரவுடன் தொல் பொருள் திணைக்களம் தடுத்தும் இங்கு அவசர அவசரமாக புதிதாக ஓர் பௌத்த விகாரையை அமைத்து அங்கு தங்கி விட்டனர். இது ஒரேஒரு தமிழ் பௌத்த ர்களுக்குரிய இடம் என்பதாலும், இங்கு அதற் கான வலுவான ஆதாரங்கள் இருப்பதாலும், அதனால் இவ்விடத்தை சரியான முறையில் அகழ்வாராய்ச்சி செய்ய வேண்டிய அவசியம் தொல் பொருள் திணைக்களத்திற்கு இருந்தும் புதிய விகாரையால் அப் பணிகள் தடுக்கப் பட்டன. தொல்பொருள் திணைக்களம் அகழ்வாராய்ச்சி செய்தால் அதன் மூலம்



இவ்விடம் தமிழ் பௌத்தர்களுக்குரியது என்பது உறுதியாகி விடும் என்பதாலேயே அகழ்வாய்வுகள் தடுக்கப் பட்டன. இறுதி யில் புதிய விகாரையைச் சேர்ந்தவர்களை அங்கிருந்து அகற்ற மாட்டோம் என தொல்லியல் திணைக்களம் உறுதி அளித் ததன் பின்பே அகழ்வாராய்ச்சி செய்ய இடமளிக்கப்பட்டது. எனவே தான் வெல்கம் விகாரையில் 1929ல் அகழ்வாய்வுகள் ஆரம்பிக்கப்பட்டு, பின்பு நிறுத்தப்பட்டு, சுமார் 25 ஆண்டுகளின் பின்பு 1953 ல் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டது. அகழ் வாராய்ச்சிக்கு செய்வதற்கு இவ்வளவு நீண்டகால இடைவெளியை இலங்கையில் வேறு எந்தத் தலத்திற்கும் தொல்லியல் திணைக்களம் எடுத்துக் கொள்ளவில்லை என்பது குறிப்பிடத் தக்கது. இவ்விபரங்க ளையே பேராசிரியர் இந்திரபாலா தனது நூலில் சுருக்கமாகக் குறிப் பிட்டுள்ளார்.

சோழரின் பின்பு விஜயபாகு மன்னன் இப்பெரும்பள்ளியில் சில திருத்த வேலை களை மேற்கொண்டான். அதன்பின்பு 12 ஆம் நூற்றாண்டின் இறுதியில் நிஸ்ஸங்க மல்லன் இப்பள்ளிக்கு ஆதரவு வழங்கி னான். அவன் காலத்தில் தமிழ் பௌத் தர்களுக்குரிய இந்த இராஜ ராஜப் பெரும்பள்ளி இலங்கையில் இருந்த ஐந்து தலைசிறந்த பௌத் தத் தலங்களுள் ஒன்றாகக் கருதப்பட்டது.

இருப்பினும் வெல்கம் விகாரையில் 1954 ஆம் ஆண்டு அகழ் வாய்வுகள் முடிந்தபின் பேராசிரியர் பரணவிதான இத்தலத்தின் ஆய் வுக் குறிப்புகளில், இவ்விடத்தில் இருக்கும் இடிபாடுகள் தமிழ் விஹார த்தின் அடித்தளம் எனவும்,இவை பொலநறுவையில் சோழர்கள் அமை த்த இந்துக் கோயில்களைப் போன்றவை எனவும், இதன் அதிஷ்டா னப் பகுதிகள் திராவிடக் கலைப்பாணியில் அமைந்த வை எனவும், இது இடிந்துள்ள நிலையில் காணப்படும் ஒரே ஒரு தமிழ் பௌத்தப் பள்ளி எனவும் தனது ஆய்வுக் குறிப் புகளில் குறிப்பிட்டிருந்தார். பேராசிரியர் பரணவிதானவின் கூற்றுப்படி வெல்கம் விகாரை தமிழ ருக்குச் சொந்தமான, தமிழ் பௌத்தப் பள்ளி என்பது உறுதியாகிறது.



விளம்பரம் அறிமுகம் செய்யும். தரம் அதை நிலைபெறச் செய்யும்.





சேவியர்
(தமிழ்நாடு)

நடுப்பக்கம்

# வன்முறைகளே, வரைமுறைகளா?

## ஆண்கள் என்ன எப்போதும் கத்தியும், கடப்பாரையும் தூக்கிக் கோண்டுதான் திரிகிறார்களா?

சமீபத்தில் ஒரு திரைப்படம் பார்க்கச் சென்றிருந்தேன். என் போதாத காலம் மனைவியோடு சென்றிருந்தேன். படம் தொடங்கிய சிறிது நேரத்திலேயே வெட்டும், கொலையும், வெடிகுண்டும் திரையை ஆக்கிரமிக்கத் தொடங்கியது. என் மனைவிக்கு வன்முறை என்றால் அலர்ஜி. திரையிலோ உலகிலுள்ள அத்தனை வகையான துப்பாக்கிகளும் வெடிக்கின்றன.



பீரங்கிகள் வெடிக்கின்றன. கத்திகள் இரத்தம் சொட்டச் சொட்ட தெறிக்கின்றன. முகத்தில் இரத்தம்சாரலடிப்பது போன்ற ஒரு உணர்வு. கையிலிருந்த பாப்கானை அடிக்கடி சோதித்துப்பார்த்துக் கொண்டேன்.

ஒரு வழியாக படம் முடிந்தது. சத்தங்களின் பதுங்கு குழியிலிருந்து மெதுவாக வெளியே வந்தோம். கலிங்கப் போர்முடிந்து வெளியே வருவது போல இருந்தது நிலமை. வீடு வந்து சேரும் வரை மனைவி வார்த்தைகளால் என்னைச் சுட்டுக் கொண்டே வந்தார். நான் பொத்தலாகி வீடு வந்து சேர்ந்தேன்.

யோசித்தேன். வெற்றி பெற்ற திரைப்படங்களில் பெரும்பாலானவை குருதிக் கதைகளையே பேசுகிறது ! ஏன் இப்படி ? ஆண்மை என்பதையும் வீரம் என்பதையும் பறை சாற்ற கத்திகளும், துப்பாக்கியும் தான் தேவையா ? மென்மையையும் பொறுமையையும் பயின்றால் அது கோழைத்தனமா? ஏன் ஆண்கள் எப்போதுமே மீசை முறுக்குபவர்களா? அவர்கள் மென்மை பயில்பவர்களாய் இல்லையா?

திரைப்படம் எவ்வளவு பெரிய ஊடகம். திரைப்படத்தின் மூலமாக மிகப்பெரிய சமூக எழுச்சியை உருவாக்கி விட முடியும். ஒரு வீரபாண்டியக் கட்டப் பொம்மன், ஒரு கப்பலோட்டியத் தமிழன், ஒரு பராசக்தி என சமூக வீதியில் மாற்றத்தை உருவாக்கிய எத்தனையோ திரைப்படங்கள் நமது திரைவரலாற்றின் பக்கங்களில் கம்பீரமாக இருக்கின்றன. ஆனால் இன்றைக்கு அத்தகைய பதிவுகள் குறைந்து விட்டன, அல்லது மறைந்து விட்டன. வன்முறையின் களத்தில் வாள்வீசுகின்ற காலம் வந்து விட்டது.

திரைப்படத் தயாரிப்பாளர்கள் ஒரு விதத்தில் சீசன் பழங்களைப் போல. ஒரு காதல் திரைப்படம் வெற்றி பெற்று விட்டால், அடுத்து அது படுதோல்வி அடையும் வரை காதல் படங்களாக எடுத்துத் தள்ளுவார்கள். ஒரு ஆக்‌ஷன் படம் வெற்றியடைந்து விட்டால் கத்தியே கதறும் வரை சண்டைப் படங்களாக எடுத்துக் குவிப்பார்கள். ரசிகர்கள் இதைத் தான் விரும்புகிறார்கள் என்று சப்பைக் கட்டு வேறு !

ஒரு ஹோட்டலில் பிரியாணி மட்டுமே கிடைக்கிறது என்றால் மக்கள் அதைத் தான் சாப்பிடுவார்கள். மக்கள் சாப்பிடுகிறார்கள் என்பதற்காக பிரியாணி மட்டும் தான் மக்களுக்குப் பிடிக்கும் என்பது முட்டாள்தனமான வாதம் இல்லையா ? ஹோட்டலில் எல்லா வகை உணவுகளும் பரிமாறுங்கள், அப்போது தெரியும் மக்கள் எதை விரும்புகிறார்கள் என்பது.

காந்தியடிகள் அஹிம்சையைப் போதித்தார். ஆனால் இன்றைய திரைப்படங்களில் வில்லன் ஹீரோவுக்கு நாலு அடி கொடுத்தால் ஹீரோ திருப்பி அடித்தாக வேண்டும். குறைந்த பட்சம் எட்டு அடி அடித்தால் தான் ரசிகக் கூட்டத்தின் வேகம் அடங்கும். இல்லையேல் புஜம் உயர்த்தி டைரக்டரை சகட்டு மேனிக்கு கெட்ட வார்த்தையால்



அர்ச்சனை செய்வார்கள். மக்களுக்கு அஹிம்சை பிடிப்பதில்லை. அஹிம்சையைப் போதிக்க வேண்டுமென்றால் கூட ஆயுத்தத்தால் தான் அதைச் சொல்ல வேண்டும் என்கிறார்கள்.

ஒரு மாணவன் தேர்வுக்காக மாடு பற்றிப் படித்துக் கொண்டு போனான். ஆனால் கேட்கப் பட்டதோ பனை மரத்தைப் பற்றிய கேள்வி. என்ன செய்ய ? மாணவன் தனக்குத் தெரிந்த மாடு புராணத்தைப் பக்கம் பக்கமாய் எழுதினான். கடைசியில், அந்த மாட்டை இந்தப் பனை மரத்தில் தான் கட்டுவார்கள் என


17 ஆம் பக்கம் பார்க்க...




விளம்பரம் அறிமுகம் செய்யும். தரம் அதை நிலைபெறச் செய்யும்.

# வன்முறைகளே, வரைமுறைகளா?

## ஆண்கள் என்ன எப்போதும் கத்தியும், கடப்பாரையும் தூக்கிக் கொண்டுதான் திரிகிறார்களா?



எழுதி முடித்தான். அதே போல தான் இன்றைய திரைப்படங்கள். வன்முறையை மூன்று மணி நேரம் காட்டி விட்டு, கடைசிக் காட்சியில் 'இப்படிப் பட்ட வன்முறை வேண்டாம்பா' என மெசேஜ் சொல்லி முடித்து விடுகிறார்கள்.

திரைப்படங்களில் சண்டைக்காட்சி இருக்க வேண்டும் என்பதில் எதிர்ப்பு இல்லை. ஆனால் சண்டைக்காட்சிகளே திரைப்படமாய் மாறிவிடக் கூடாது. ஒரு போராட்டம், போர்க்களம் எல்லாம் இருந்தாலும் அந்தத் திரைப்படம் சொல்லும் மையச் செய்தி என்ன என்பதே முக்கியம்.

இன்றைய சமூகத்தில் அன்பே முக்கியமாய்த் தேவைப்படுகிறது. கட்சிகளெல்லாம் போட்டி போட்டுக் கொண்டு தங்களை புனிதப்படுத்தவும், எதிராளிகளை காயப்படுத்தவும், எதிர்ப்போரை பலவீனப்படுத்தவும் திரைப்படங்களை எடுத்துக் குவிக்கிறார்கள். இவையெல்லாம் மக்கள் மத்தியில் உணர்வைத் தூண்டி விட்டு சமூக நல்லிணக்கத்தைக் குலைக்கிறது. நமக்குத் தேவை அன்பு. அத்தகைய அன்பைப் போதிக்கும் திரைப்படங்களை சமூக வீதியில் உருவாக்கலாம்.

அன்பைப் போல நமக்குத் தேவையான இன்னொரு விஷயம் சகிப்புத் தன்மை. இந்த நவீன யுகம் ஒரு ஃபாஸ்ட் லைஃப் கலாச்சாரத்துக்குள் நுழைந்து விட்டது. ஹோட்டலில் ஆர்டர் செய்து விட்டு நான்கு நிமிடம் பொறுமை காக்க முடியாத தலைமுறை உருவாகிவிட்டது. வங்கியில் வரிசையில் நின்று, டோக்கன் வாங்கி, ஆயிரம் ரூபாய் எடுக்க அரை நாள் செலவிட்ட காலங்களெல்லாம் மலையேறிவிட்டன. எதுவும் வினாடிகளில் முடியாவிட்டால் டென்ஷனாகிவிடுகிறது இளம் தலைமுறை. அவர்களுக்கு சகிப்புத் தன்மையையும், பொறுமையும் போதிக்கின்ற திரைப்படங்கள் தேவை.

சமூக நீதி இன்றைக்கு காணாமல் போய்விட்டது. சமூகத்தில் நிலவுகின்ற ஏற்றத்தாழ்வுகளுக்கு எதிராக போர் தொடுக்க வேண்டிய சூழல் நிலவுகிறது. சமூகத்தில் ஒடுக்கப்பட்ட மக்களுக்காய் குரல் கொடுக்க வேண்டிய காலகட்டம் வந்து விட்டது. அவர்களும் சக மனிதர்களே எனும் அக்கறை உருவாக வேண்டும். அத்தகைய சிந்தனையை உருவாக்குகின்ற திரைப்படங்கள் வரவேண்டும். இப்படி திரைப்படங்கள் சமூகத்தில் புரையோடிப் போயிருக்கின்ற சிக்கல்களை அடையாளப்படுத்தவும், அதற்கு எதிராய் மக்களை ஒன்றுதிரட்டவும் பயன்படவேண்டும். அல்லது திரைப்படங்கள் மனிதத்தின் தேவையை அடையாளப்படுத்தி, மக்களின் மனதில் மாற்றத்தை உருவாக்க வேண்டும்.

அதை விட்டு விட்டு,'யாரு வெட்டுனாலும் அருவா வெட்டும்டா','என்னோட அருவா இரத்த ருசி பாக்காம அடங்காதுடா', 'என் துப்பாக்கி உன்னைத் தூங்க விடாதுடா' என்றெல்லாம் வீர வசனம் பேசித் திரிவதில் அர்த்தமில்லை. திரைப்படங்களா இல்லை அவை கொலைக் களங்களா எனும் சந்தேகமே வருகிறது.

ஆண்கள் என்ன எப்போதும் கத்தியும், கடப்பாரையும் தூக்கிக் கொண்டு தான் திரிகிறார்களா ? அவர்கள் பொறுப்பான பெற்றோராக, பணிவான பிள்ளைகளாக, கண்ணியம் மிக்க இளைஞர்களாக, கடமை மிக்க கணவர்களாக எப்படியெல்லாமோ வாழ்கிறார்கள். அவர்களில் பெரும்பாலானவர்களுக்கு ஆயுதம் அலர்ஜி !

திரைப்படங்கள் அதீத வன்முறையைக் காட்சிப்படுத்தும் போது பல சிக்கல்கள் உருவாகின்றன. முதலில் அது இளைஞர்களைப் பாதிக்கிறது. அதைப் போல செய்து பார்க்க வேண்டும் எனும் அபத்தமான சிந்தனையை அது இளையவர்களுக்குத் தருகிறது. இப்படிச் செய்வது தவறில்லை எனும் தோற்றம் உருவாகிறது. திரும்ப திரும்ப ஒரே விஷயத்தை அவர்கள் பார்க்கும் போது, 'இதெல்லாம் சாதாரணம், இதெல்லாம் இயல்பு' எனும் சிந்தனை அவர்களுக்கு வந்து விடுகிறது. அது அவர்களுடைய அடிப்படைக் குணாதிசயத்தையே மாற்றி விடுகிறது.

திரைப்படங்கள் வன்முறையைப் பயிற்றுவிக்கும் பாடசாலைகளாக இருக்கக் கூடாது. திரைப்படங்கள் குற்றங்களைக் கற்றுக் கொடுக்கும் கல்வி நிலையங்களாக இருக்கக் கூடாது. அவை சமூகப் பொறுப்புணர்வோடு செயல்பட வேண்டும். சமூக மக்களுக்குத் தேவையான விஷயங்களை கலை வடிவில் ரசிக்கும் படியாகத் தர வேண்டும். திரைப்படங்கள், வெறும் படங்களல்ல. வாழ்வியல் பாடங்கள். கவனமாய்க் கையாண்டால் அறுவடை நிச்சயம். இல்லையேல் அழிவுகள் சர்வ நிச்சயம். ■

---



# வைத்தீஸ்வரா கல்லூரியில் மும்மூர்த்திகள் சிலை திறப்பு

## சிற்பக் கலைஞர்களுக்கு வெற்றிமணியின் வாழ்த்துகள்!

யாழ்ப்பாணம் - வண்ணார்பண்ணை வைத்தீஸ்வரா கல்லூரியின் மும்மூர்த்திகள் சிலைகள் மற்றும் விளையாட்டு முற்றம், சிறுவர் கண்காட்சி, பாடசாலை உள்ளக நடைபாதை, புத்தாக்குனர் ஆய்வு கூடம் என்பவற்றின் திறப்பு விழா கடந்த 08ஆம் திகதி திங்கட்கிழமை காலை சிறப்பாக இடம்பெற்றது.

கல்லூரி முதல்வர் திருமதி வாசுகி தவபாலன் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் அதிபர் ச.அம்பிகைபாகன் அவர்களின் சிலையை ஓய்வுநிலை கிராம அலுவலர் மா.இராமலிங்கம் திறந்து வைத்தார். தொடர்ந்து, உப அதிபர் கா. வைரமுத்து அவர்களின் சிலையை செ.உதயச்சந்திரன்,( உப தலைவர்- பழைய மாணவர் சங்கம்) ஆசிரியர் ச. சீனிவாசகம் அவர்களின் சிலையை ஸ்ரீராம் ஜுவலறி உரிமையாளர் ஸ்ரீ பாலமுரளியும் திறந்து வைத்தனர்.அதிபர் ச.அம்பிகைபாகன்,உப அதிபர் கா.வைரமுத்து, ஆசிரியர் ச.சீனிவாசகம் ஆகியோர் 1935ஆம் ஆண்டு முதல் 1968ஆம் ஆண்டுவரை கல்லூரியின் வளர்ச்சிக்குப் பெரிதும் துணைநின்றவர்களாவர். இதனால், வைத்தீஸ்வரா கல்லூரியின் மும்மூர்த்திகள் என இவர்கள் புகழப்படுகின்றனர். இவர்களின் மார்பளவு சிலைகளை அமைப்பதற்கு லண்டன் பழைய மாணவர் சங்கம் முழுமையான பங்களிப்பை வழங்கியிருந்தது. இந்த சிலைகளை, ப.பிரசாந் (விரிவுரையாளர் - இராமநாதன் நுண்கலைக் கல்லூரி), த.கபேஸ்சன் (ஆசிரியர் - யாழ். நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி), இ.கிருபாகரன் (ஆசிரியர் - யா/சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி ஆகியோர் சீமெந்தை ஊடகமாகக் கொண்டு



ப.பிரசாந்



இ.கிருபாகரன்



த.கபேஸ்சன்

உருவமைத்திருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. சிற்பக்கலை தாய்மண்ணில் வளர்வதுகண்டு வெற்றிமணி மகிழ்ச்சி. ■




விளம்பரம் அறிமுகம் செய்யும். தரம் அதை நிலைபெறச் செய்யும்.

# யேர்மனியில் தமிழர்களின் தொல்லியல் இசைக்கருவியான பறையை, இசைத்து மகிழ்ந்த இளையோர்!



ஓகஸ்ட் மாதம் 5ஆம் திகதியில் இருந்து 8ஆம் திகதி வரை யேர்மனியின் டோட்முண்ட் நகரத்தில் அமைந்துள்ள "தமிழர் அரங்கம்" மண்டபத்தில் பறையிசைப் பயிற்சிப் பட்டறை நடைபெற்றது. பிரான்ஸ் நாட்டில் "மகிழ் பறை இசைக் குழுவை" நடத்தி வருகின்ற திரு பரா அவர்கள் பயிற்சியினை வழங்கியிருந்தார். யேர்மனியில் நடைபெறுகின்ற தமிழர் தெருவிழா ஒவ்வொரு முறையும் பறையிசையுடனேயே ஆரம்பமாகும். இந்த ஆண்டு செப்டம்பர் 2 தொடக்கம் செப்டம்பர் 4 வரை நடைபெறவுள்ள தமிழர் தெருவிழாவில் தாமும் பறை இசைக்க வேண்டும் என்று ஆர்வம் கொண்டிருந்த பல இளையோர்களும் இந்த பயிற்சிப் பட்டறையில் கலந்து கொண்டி ருந்தார்கள்.

தமிழர்களின் தொல்லியல் இசைக் கருவியான பறையை இசைத்து மகிழ்ந்தார்கள். இளையோர்கள் குறுகிய காலத்தில் சிறப்பாக பறையை இசைக்கிறார்கள் என்று திரு.பரா அவர்கள் பெருமிதமடைந்தார். பறை இசையை மக்களை மகிழ்விக்கவே பயன்படுத்த வேண்டும் என்றும் திரு பரா அவர்கள் வேண்டுகோள் விடுத்தார்.

## வினோத உடை போட்டியில் கறுப்புச் சந்தைக்கு எதிராகக் குரல் கொடுத்த சிறுவன்

### "QR ஐ மதிப்போம், Q ஐ தவிர்ப்போம்"




கிளிநொச்சியில் உள்ள திருவையாறு தூயவன் முன்பள்ளி விளையாட்டு விழாவில் வினோத உடை போட்டியில் முதல் பரிசு பெற்ற சிறுவன். நல்ல ஒரு கருத்து, "QR ஐ மதிப்போம், Q ஐ தவிர்ப்போம்" உண்மையில் எரிபொருள் தட்டுப்பாடு தாய்மண்ணில் உண்டு. அதனை மறுக்கவில்லை. ஆனால் பிறருக்கு கிடைக்கா வண்ணம் செய்வதில் கறுப்புச்சந்தை முன்னணியில் நிற்கிறது. ஓட்டோக்கள் எரிபொருளை நிரப்பி, உடன் உறுஞ்சி எடுத்து,பின் மீண்டும் வரிசையில் நின்றதைக் கண்ணால் கண்டு எடுத்த படம் இது.

தற்போது எரிபொருளுக்கு முன்போல் வரிசை நீண்டு இல்லவிட்டாலும், வான், கார், இவற்றுக்கு ஏற்றப்பட்ட விலை குறையவே இல்லை. (ம்பலப்பிட்டியில் இருந்து விமானநிலையத்திற்கு 17 ஆயிரம் எடுத்துள்ளார்கள்) இலங்கையில் முன்பு வெங்காயவிலை ஏறினால் ஏறினதுதான் எனச் சொல்வார்கள். அதுபோல்த் தான் இன்றும். வெளி நாட்டில் இருந்து வருபவர்கள் வாகனங்கள் எவ்வளவு காசு என்றாலும் பிடிப்பார்கள் என்று அவர்கள் நினைப்பு. கம்போடியா போல் இனி இலங்கையில் பொருட்கள் வாங்க டொலர் பாவனைக்க வந்தாலும் அதிசயம் இல்லை. கொழும்பு விமான நிலையத்தில் ஒரு கோப்பி என்றாலும் டொலரில்தான் விலை போடப்பட்டுள்ளது, இங்கு குறிப்பிடத்தக்கது.

**தகவல்:**
**சுபா (மாதகல்)**

## யாழ்ப்பாணத் தமிழ்!



நான் ஒரு முறை சமயப் பிரசங்கம் செய்வதற்காக யாழ்ப்பாணத்துக்குப் போயிருந்தேன். அந்த நேரம் பார்த்து என்னை அழைதத்தவர் வீட்டு முதியவர் ஒருவர் இயற்கை எய்திவிட்டார். அதனால் காலையிலே அவர் வீட்டுக்குச் சென்று துக்கம் விசாரித்துக் கொண்டு தங்கியிருந்த இடத்துக்கு வந்து சேர்ந்தேன்.

அப்போது ஒரு பணியாள் வந்து சுவாமி தோஞ்சாச்சா சாப்பாடு எடுத்து வைக்கட்டுமா என்று கேட்டார். எனக்கு விளங்கவில்லை. திரும்பத் திரும்ப அவர் தோஞ்சாச்சா தோஞ்சாச்சா என்று கேட்டார். எனக்கு ஒன்றுமே புரியவில்லை.

அந்தப்பணியாள் சென்று ஒரு படித்த பெண்மணியை அழைத்து வந்தார். அந்த அம்மா என்னிடம் சுவாமி துக்க வீட்டுக்கு போய் வந்தீர்களே தோய்ந்து விட்டீர்களா என்று இவன் கேட்கின்றான். நீங்கள் ஸ்நானம் பண்ணி விட்டீர்களா என்று கேட்டார். எனக்கு வெட்கமாகப் போய்விட்டது. தோய்தல் என்பதே நீராடுவதற்கு சரியான தமிழ் வார்த்தை. தோய்தல் என்றால் ஒன்றிலே முழுமையாக அமிழ்ந்து போதல் என்று பொருள்.

அந்தத் தொல்காப்பியத் தமிழை ஒரு வேலைக்காரனே சாதாரணமாகப் பேசுகின்றான் யாழ்ப்பாணத்தில். தூய தமிழ் வாழ்ந்து கொண்டிருப்பது தமிழ்நாட்டில் அல்ல. அது யாழ்ப்பாண மக்களாலேயே பேசப்படுகின்றது. அங்குதான் அது வாழ்கின்றது.

(திருமுருக கிருபானந்தவாரியார் எழுதிய விளக்கு என்னும் நூலில் இருந்து)

**இரா.சம்பந்தன்**







விளம்பரம் அறிமுகம் செய்யும். தரம் அதை நிலைபெறச் செய்யும்.




# இல்லை என்று சொல்ல ஏன் தலையை ஆட்டுகின்றோம்?

ஓம்! இல்லை! இதற்கு தலையாட்டும் நம் தன்மையை வைத்தே கே.பாலச்சந்தர் நினைத்தாலே இனிக்கும் படத்தை இறுதி வரை திறிலாக ஓட்டியிருப்பார் பார்த்தவர்களுக்குப் புரியும்.

இல்லை! வேண்டாம்! முடியாது! இப்படி மறுப்பைத் தெரிவிக்க ஒவ்வொரு மொழியிலும் பல விதமான வார்த்தைகள் உள்ளன, ஆனால் உலகில் வாழும் அநேகமான மக்கள் மறுப்பை இலகுவாக தமது தலையை ஆட்டித் தெரிவிப்பார்கள். அது ஏன்? இதற்குரிய காரணத்தை ஆராய்ந்தவர்களில் ஆங்கிலேய இயற்கையியல் அறிஞர் சார்ல்ஸ் டார்வினும் ஒருவர் ஆகும். இவர் யாரென்பதை நீங்கள் கண்டிப்பாக அறிந்திருப்பீர்கள். உயிரினங்களின் படிவளர்ச்சிக் கொள்கை அதாவது "The therory of evolution" என்று அழைக்கப்படும் கொள்கையை முன்வைத்தவர் ஆவர்.

டார்வினின் கருத்துப்படி உலகில் வாழும் அநேகமான மக்கள் மறுப்பைத் தெரிவிக்கத் தலையை ஆட்டுவதற்கான




அடிப்படையைக் குழந்தைப் பருவத்தில் காணலாமாம். இதைப் பற்றி 1872 வெளியான „The Expression of the Emotions in Man and Animals“ எனும் புத்தகத்தில் விளக்கியுள்ளார். அது என்னவென்றால், சிறு குழந்தைகள் முதல் முறையாக மறுப்பைத் தெரிவிப்பது உணவு உண்ணும் போது தான். தாம் குடிக்கும் தாய்ப்பால் அல்லது ஊட்டி விடும் உணவு தமக்குப் பிடிக்காவிட்டால் என்ன செய்வார்கள்? நம்மைப் போல் வாயைத் திறந்து பேசவா முடியும்? அல்லது கைகளால் ஏதும் சைகையைக் காட்டவா முடியும்? இல்லை, அவர்களால் முடிந்த ஒரே ஒரு செயல் தமது தலையை ஒரு பக்கத்தை நோக்கி பின்னே எடுப்பது தான். இந்த அடிப்படையில் தான் மனிதர்கள் பின்னர் தமது தலையை ஆட்டி மறுப்பைத் தெரிவிக்கின்றனர் என்று டார்வின் கூறினார். எனவே தலையை ஆட்டுவது சிறு குழந்தைகள் கற்கும் முதல் சைகைகளில் ஒன்றாகும்.




Dr.நிரோஷன் தில்லைநாதன்
(யேர்மனி)

இதில் உள்ள ஆச்சரியம் என்னவென்றால் பிறப்பிலிருந்தே செவிட்டுத் தன்மை கொண்ட மற்றும் கண் பார்வை இழந்த குழந்தைகள் கூட மறுப்பைத் தெரிவிக்க தமது தலையை ஆட்டுகின்றன என்பது தான். இச்சைகையை ஒரு தடவை கூட பார்க்காத இவர்கள் எவ்வாறு இதை அறிந்தன? எனவே இது கூட டார்வினின் கூற்றுச் சரியாக இருக்கும் என்பதற்கான ஒரு ஆதாரம் ஆகின்றது.

சரி மனிதர்களை விடுவோம், விலங்குக ளிலும் இந்த விஷயத்தை நாம் காணலாமா? கண்டிப்பாக, அதுவும் குறிப்பாக பொனொபோ எனப்படும் மனிதக் குரங்குகள் கூட தமது தலையை ஆட்டித் தான் மறுப்பைத் தெரிவி க்கின்றன. ஆனால் வேறு குரங்கு இனங்கள் இவ்வாறு செய்வ தில்லை. அதற்குக் காரணம் என்னவெ ன்றால், இந்த விலங்குகளுக்கு ஒரு விஷயம் வேண்டாம் என்றால் அவை எழுந்து அவ்விடத்தை விட்டுச் சென்றுவிடுவார்கள். சக இனக் குரங்குகளுக்கு அதைச் சைகை மூலமாகத் தெரிவிக்க வேண்டும் என்கின்ற அவசியம் கிடையாது. எனவே தலையை ஆட்டுவது என்பது மறுப்பைத் தெரிவிப்பதற்கான ஒரு மேம்பட்ட வடிவமாகும்.




சரி, கடைசியில் ஒரு சுவாரசியமான விஷயத்தையும் கூறிவிடுகின்றேன். ஆரம்பத்தில் குறித்தது போல் உலகின் அநேகமான மக்கள் இடதிலிருந்து வலது பக்கத்திற்குத் தலையை ஆட்டித் தான் மறுப்பைத் தெரிவிக்கின்றனர். ஒரு சில நாட்டவர்கள் மட்டும் தான் இதற்கு மாறாகச் செயலாற்றுகின்றனர். உதாரணத்திற்கு பல்காரியா நாட்டைச் சேர்ந்தவர்கள்




இல்லை என்று சொல்ல மேலிருந்து கீழேயும், ஆம் என்று சொல்ல இடதிலிருந்து வலது பக்கத்திற்குத் தலையை ஆட்டுவார்கள். இது ஆச்சரியமாகல்லையா?

Charles Darwin believes that this has to do with our primitive instincts and our nursing habits. When babies seek food they tend to lean their head forward in search of their mother’s breast. However, when they are not hungry, they shake their head from shoulder to shoulder trying to avoid the breast. This instinct continues into our life and that’s why we nod for yes and shake our heads for no.




## வள்ளலார் பரஞ்சோதி வேதாத்திரி மகரிஷி வழியில்
## சக்ரா தியானம் மற்றும் நோய் தீர்க்கும் தியானப் பயிற்சிகள்

DORTMUND நகரில் ஐப்பசி மாதம் இரண்டு நாள்கள் பயிற்சிகள்

அருள்நிதி டாக்டர் கோபால்ஜி
(கோயம்புத்தூர் தமிழ்நாடு)



**முதல் நாள் பயிற்சிகள்:**

1. சித்தர்களின் மூச்சு பயிற்சிகள்.
2. மூச்சு தியானம்.
3. சக்ரா தியானம் மற்றும் நோய் தீர்க்கும் தியான பயிற்சிகள்.

**இரண்டாம் நாள் பயிற்சிகள்:**

1. சித்தர்களின் நீள் ஆயுளுக்கான காயகல்ப யோக பயிற்சிகள்.
2. ஆல்பா தியானம் முதல் டெல்டா தியானம் வரை.
3. நோய் தீர்க்கும் முத்திரைகள் மற்றும் ஆழ்நிலை தியானம்.

சித்தர்கள் அருளிய வாசியோகக் கலை.

தொடர்புகளுக்கு: 104915209419269

விளம்பரம் அறிமுகம் செய்யும். தரம் அதை நிலைபெறச் செய்யும்.

நீண்டகாலம் மக்கள் மனதில் நம்பிக்கை ஒளி பரப்பும் தங்க நகையகம்

# Jaffna Bazar Jewellery




தங்க நகைகள் என்றால் தங்கள் மனதில் நிலைத்து இருப்பவர்கள் நாங்கள் என்றும் நாடுகள்

2022 ஆண்டின் அதி உன்னத புத்தம் புது டிசைன்கள் எமது கையிருப்பில்



திருத்த வேலைகள் குறுகிய காலத்துள் செய்து தரப்படும்.

பொன்னுருக்கு, காதுகுத்து வைபவங்களுக்கு எம்மை அழையுங்கள்



ஆலயங்களுக்கு தேவையான பூஜை பொருட்கள் எம்மிடம் நிறைவாக உண்டு

உங்கள் இலத்திற்கு தேவையான மளிகைப் பொருட்கள் என்றும் போல் மலிவு விலையில் கிடைக்கும்

பசுமையான மரக்கறி வகைகள்
கடல் உணவு வகைகள்
அனைத்தும் எம்மிடம் தரமாக
மலிவாகக்கிடைக்கும்

Jaffna Bazar

Jaffna Bazar, Kaiser Straße.49 ,
69329 Frankfurt Main

Tel: 069 25 62 6353 \ 0049 69 25626353
0049 179 4792961 \ 0049 151 71520425

# யாவருக்குமான கலையாக பரதம்

நூற்றாண்டு கால மானிட வாழ்வியல் தனக்கே உரிய அடையாளமாக, கலைகளை தம் சந்ததியினர் வழியே கடத்திக்கொண்டே செல்கின்றது . ‘கலை ‘ என்பது வெறுமனே ஒரு ஆற்றளாக கருதி விட முடியாது. மனித வாழ்வியலை உணர்வுமிகு ஆற்றலாகவும், உயிருக்கும், உணர்விற்குமான பரிமாற்றங்களை பகிரவ ல்ல கலைகளாகவே திகழ்கின்றன.

பரந்த அர்த்தத்தில்,கலை என்ற சொல் அறிவு, நடைமுறை, கருத்து, கட்பனை மற்றும், உள்ளுணர்வு ஆகியவற்றின் அடிப்படையில் எந்தவொரு வளர்ந்த செயலையும் குறிக்கும்.

கலை என்பது மனித கலாசாரத்தின் படைப்பு ஆகும்.

கலை என்றவுடனேயே ஆயகலைகள் அறுபத்துநான்கு என்பதே எம் நினைவிற்கு வரும் ஆம் இக்கலைகள் அதன் இயல்பின் அடிப்படையில் நாம் பல்வேறு வகைகளாக ஆக்கிக்கொள்கிறோம்.

அடிப்படையில் கலை என்பது ஒரு வெளிப்பாடு எனலாம் . கலையை பிராசுவிப்பவர்களை நாம் “கலைஞர்“ என்போம். அகக் காட்சிகளை அல்லது மனம் சார்,உடல் சார்,புத்தி சார் திறமைகளையோ தன்னையும் தான் சார் பிறரையும் மகிழ்விப்பவனாகவே கலைஞன் விளங்குகிறான். கலைகள் இன்றைய காலப்பகுதியில் 64 யும் கடந்து நூற்றுக்கும் மேட்பட்ட வகைகளை பெற்று பல துறைகளில் பரிமாணங்களை கண்டுள்ள நிலையில். என்றுமே முதன்மை கலைகளை அல்லது நுண்களைகள் என்று நாம் முன் வைப்பது. ஓவியம், சிற்பம், கட்டிடக்கலை, ஒளி படக்கலை, மற்றும் நிகழ்த்து கலை வடிவாங்களான நடனம், இசை. நாடகம் என்பனவும் ஆகும் .

அந்த வகையில் நடனக்கலை பற்றி சிந்திக்கயில். நடனம் ஆனது பொதுவாக ஓசைக்கும் இசைக்கும் உடலை அசைத்து நிகழ்த்தப்படும் கலை வடிவம். இதில் பரத நாட்டியம் தமிழ் பாரம்பரிய கலை வடிவமாகும்.ஆரம்பகால சதிர் நடனமே பரதநாட்டியம் ஆகிறது. அதாவது தேவர் இறைவன் அடியார் தொண்டு செய்பவர். எனும் பொருள் படும் நடன பெண்டிர் கோயில்களில் இறைவனிடம் தம்மை அர்ப்பணித்து இறைவனுக்காக ஆடி வந்தன. எனினும் காலப்போக்கில் குறிப்பிட்ட சமூகத்தினரே சதிர் எனும் நடனம் ஆடுகைக்காக




● ருக்மணி அருண்டேல்

தம்மை ஈடுபடுத்திக் கொண்டனர். ஆரம்பகால சதிர் ஆடும் பெண்கள் தாமே பாடலை பாடியபடி இசைக்கேட்ப சதிர் ஆடினர்.

இக்காலகட்டத்தில் சதிர் தம் செல்வாக்கில் இருந்தமைக்கு சிறந்த உதாரணம். மாதவி ஆடிய பதினொருவகை ஆடல். இச் செய்திபற்றி சிலப்பதிகாரம் கூறும். பின் சோழர் காலத்தில் அவர்களுக்கான சகல மரியாதைகளையும் பெற்றிருந்த பொழுதிலும் காலப்போக்கில் நாயக்கர், முஸ்லீம் படையெடுப்புகாலத் தில் சதிர் நடனமும் சதிர் ஆடும் பெண்களும் போகப்பொருளாகவே பார்க்கப்பட்ட அவலநிலை எற்பட,பின் பிரிட்டிஷ் ஆட்சி காலத்தில் கோயில்களில் நடனம் ஆட தடை விதிக்கப்படவே இது பரத கலையின் இருண்டகாலமாயிற்று. இவ்வாறு ஆதரவை இழந்த சதிர்,ஒரு புரட்சியின் பின்னரே பக்திசார் மட்டுமல்லாமல், ஒருவர் தன் எண்ணம் சார் வெளிப்பாட்டை மக்கள் முன்னிலையில் வெளிப்படுத்தும் ஒரு ஆடல் ஊடகமாக மேடை ஆற்றுகைகளுடன் புதிய பரிணாம விதிகளுடன் மிளிர தொடங்கியது. பின்னரே பரதநாட்டியம் என்ற பெயருடன் உலகிட்கு காட்டிய பெருமை. கலாஷேக்திரா நிறுவுனர். ருக்மணி அருண்டேல் அம்மையாரையே சாரும். மேலும் இதற்காக அக்காலத்தில் தஞ்சாவூர். பால சரஸ்வதி அம்மையார் போன்றொரும் பெரிதும் பாடுபட்டமைக்கான சன்றே கடந்த நூற்றாண்டின் வெளிப்பாடாக நம் அனைவராலும் பயிலப்படும்



செல்வி
திவ்யகுமாரி சின்னையா
(லாஷ்ய கலாபவனம்
நடனப்பள்ளி
இயக்குனர்–இலங்கை)

பரதம் ஆகும். இன்றைய சூழ்நிலையில் பரதநாட்டியமானது. சாஸ்த்ரியம் மாறாமல் மதிக்கக்கூடிய இடத்தில்வைத்து இறைசார் கொண்டாடப்படுவதற்கு இவர்களின் உழைப்பேகாரணம். மேடை நிகழ்வுகளில் பரதநாட்டியம் ஆற்றுகை செய்யப்பட்ட தன்பின்னரே அதன் அழகியல் ஈர்ப்பும், இசைசார் அணுகுமுறையும், அதனால்பெறப்படும் இன்பமானது, கலைஞர் களாலோ பார்வையாலர்களாலோ உணர்வுபூர்வ உயிர்கலையாய் உள்வாங்கப்பட்டது.

கலாஷேக்த்ரா நிறுவுகையின் பின்னரே பெண்களுக்கு மட்டும் இன்றிருந்த பரதம் ஆண்களும் ஆடும் நடனக்கலை ஆனது. காலப்போக்கில் பிற்போக்குவாதிகளின் கண்ணோட்டம் மலுங்கடிக்கப்பட்டு பரதம் தன் செல்வாக்கினை மீட்டெடுத்தது. படிப்படியான வெற்றியை அடைந்த பரதமே தற்போழுது செல்வந்தர், ஏழை, உயர்குடி, தாழ்மைக் குடி,உள்நாட்டவர்,வெளிநாட்டவர் . என்ற பாரபட்சம் தகர்த்துத்தெரியப்பட்டு எல்லோராலும் பயிலும்கலையாக திறமையை முன்னிலைப்படுத்தி நிற்கும் கலையாக மெலெழுந்துநிற்கிறது. இதற்கு சிறந்த உதாரணம். சம காலத்தில் ஆண்,பெண் வேறுபாடுகளின்றி ஏன் திருநங்கை சகோதரிகளும் கூட தம்மை பரதத்தில் ஈடுபாடுத்தியுள்ளமை இதற்கு சிறந்த உதாரணம் இந்தியாவில் வாழும் பத்மஸ்ரீ நர்த்தக்கி நடராஜன் அம்மையாரை சிறந்த எடுத்துக்கட்டாக கூறலாம். ”திறமைக்கே என்றும் பரதம் ”என்ற தொனிக்குறளை உயர்த்துவதாய் உள்ளது. மேலும் பரதம் தம் தனித்துவத்தைன்மையால்தான் கடல்கடந்த நாடுகளில் மொழி கடந்து வாழ்கிறது. இன்னுமொரு சான்றாக கூறுவதாயின் இந்திய தேசத்தின் பழங்குடிகுழந்தைகளுக்கும் கூட அமெரிக்கபெண்ணான பேராசிரியர் கௌஷால்யா ஸ்ரீனிவாசன் அவர்கள்மூலம் பரதம் பயிற்றுவிக்கப்படுகிறது.

இவ்வாறு பல தேசங்கள் கடந்தும். பல ஆசிரியர்களின் சேவையினாலும், கலை படைப்பாளிகளினாலும், பாரபட்சமற்ற கலை ஊக்குவிப்பால் பரதக்கலை கல்வி நிறுவனகளிலும். பாடசாலைகளும்கூட எல்லோருக்குமான மதிப்புமிக்க மிளிர்கிறது என்று குறிப்பிடுதலே சரியானதாகும். ஆக முறையான கலைத்தாகம் கொண்ட யாவருக்கும் இவ்பரதத்தாய் சொந்தமானவள்.







விளம்பரம் அறிமுகம் செய்யும். தரம் அதை நிலைபெறச் செய்யும்.

# நீ விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் அது உன்னோடு இருக்கட்டும்

# பாலியல் வன்முறை



## இலக்கியத்தில் இவர்கள்... 25





கௌசி (யேர்மனி)



ஆணுக்கு ஆணும், பெண்ணுக்கு ஆணும், ஆணுக்குப் பெண்ணும் என வரன்முறைகள் தாண்டிப் பாலியல் வன்முறை சகல இன மக்களிடையிலும் அதிகரித்துக் காணப்படுகின்றன. இதற்கு ஆணா, பெண்ணா, சமுகமா காரணம் என ஆய்வுகள் மேற்கொள்ள வேண்டியது அவசியம். ஆண்களை ஆண்கள் வன்முறைக்கு உட்படுத்துவது பற்றி எவ்வித விபரங்களும் வெளியிடப்படுவதில்லை. தற்காலத்தில் பெண்களைக் குழந்தைகளை ஆண்கள் பாலியல் வன்முறைக்கு உட்படுத்துவதுதான் பெரும்பாலும் பேசப்படுகின்றது. அத்துடன் பெண்கள் மானபங்கப்படுத்தப்படுவதும் வன்முறைக்கு உட்படுத்தப்படுவதும் அதிகரித்துள்ளன. இணையங்கள்தகவல்களைவெளிப்படுத்துவதனால், இந்த வன்முறைகள் இக்காலத்தில்தான் நடக்கின்றன என்று பலவாறாகப் பேசுகின்றார்கள். ஆனால், பெண்களை ஆண்கள் மனதாலும் உடலாலும் வன்முறைக்கு உட்படுத்துவது இன்று நேற்று வந்தது அல்ல என்று இலக்கியங்கள் பறைசாற்றுகின்றன.

> **இடைநெடுந் தெருவிற்**
> **கதுமெனக் கண்டென்**
> **பொற்றொடி முன்கை பற்றினன்**
> **ஆகஅன்னாய் என்றெனன்**
> **அவன்கைவிட் டனனே**

என்ற வரிகள் தெருவில் தன் தாயுடன் ஒரு பெண் நடந்து செல்லும் போது அவளுடைய கையை ஒரு ஆடவன் பிடித்து இழுத்து வன்முறைக்குட்படுத்துகின்றான். அந்த நேரத்திலே அம்மா என அவள் கத்துகின்ற போது அவளுடைய கையை விட்டுவிடுகின்றான்.

கள்ளுரிலே வாழுகின்ற ஒரு பெண் தன்னுடன் ஒன்றாகக் கூடி இன்பம் அனுபவித்துவிட்டு அப்படி செய்யவில்லை என்று கூறிய ஆண்மகனை சபையோர் முன் நிறுத்தினாள். அப்போது அவனும் தன் குற்றத்தை ஒப்புக்கொள்ளவில்லை.அப்படி செய்யவில்லை என்று பொய்யுரைக்கின்றான். இந்த சந்தர்ப்பத்திலே உண்மையை விசாரித்தறிந்த பெரியவர்கள், அவனை மரத்தில் கட்டி நன்றாக சுடப்பட்ட கடற்சிப்பிகளை மண்தொட்டியில் போட்டு அதிலே உப்பில்லாத ஆற்று நீரை ஊற்றுகின்ற போது அது நன்றாகக் கொதித்து வெண்ணை போன்ற நிறத்திற்கு வரும். இந்த நீரைத் தலையில் ஊற்றித் தண்டனை கொடுத்ததாகவும் கூடி நின்றோர் ஆரவாரம் செய்ததாகவும் அகநானூறு 256ஆவது பாடல் வரிகள் எடுத்துக் காட்டுகின்றது.

> **கரும்பமல் படப்பைப்**
> **பெரும்பெயர்க் கள்ளுர்த்**
> **திருநுதற் குறுமக**
> **ளணிநலம் வவ்விய**
> **அறனி லாளன் அறியே னென்ற**
> **திறனில் வெஞ்சூ ளறிகரி**
> **கடாஅய் முறியார் பெருங்கிளை**
> **செறியப் பற்றி**
> **நீறுதலைப் பெய்த ஞான்றை**
> **வீறுசா லவையத்து**
> **ஆர்ப்பினும் பெரிதே.**

இதிலிருந்து அக்காலத்தில் பொய்மை தழுவிய ஆண்மகனைப் பலரும் கூடி ஆர்ப்பரித்துத் தணடனை வழங்கியிருக்கின்றனர். ஆனால், இன்று இங்கிலாந்து, ஜெர்மனி போன்ற நாடுகளில் 5 நட்சத்திர சொகுசு விடுதி போன்ற சிறையிலே அடைத்துத் தண்டனை வழங்குகின்றார்கள். தண்டனையின் தாக்கத்தைப் பொறுத்தே தவறுகளின் வீரியமும் குறையும் பிறரறியாமல் தலைவனும் தலைவியும்



காதலிக்கின்றார்கள். அதன் பின் தலைவன் அவளைத் திருமணம் செய்வதற்கு நாளைத் தள்ளிக் கொண்டே போகின்றான். ஆனால் அவனை ஊரறித் திருமணம் செய்ய நினைத்த தலைவிக்கு அவனில் சந்தேகம் ஏற்படுகின்றது. ஒருவேளை தன்னை அவன் ஏமாற்றிவிட்டால் என்ற அச்சத்திலே தோழியிடம் இவள் புலம்புவதாகக் கபிலர் இந்தப் பாடலை பாடியிருக்கின்றார்.

> **யாரும் இல்லைதானே கள்வன்தான்**
> **அது பொய்ப்பின் யான்**
> **எவன் செய்கோ?**
> **தினைத்தாள்அன்ன சிறுபசுங்கால**
> **ஒழுகுநீர் ஆரல் பார்க்கும்**
> **குருகும் உண்டுதான் மணந்த**
> **ஞான்றே.**

நாங்கள் இன்பம் துய்த்த இடத்திலே சாட்சிக்கு யாரும் இல்லை. குருகு தான் இருந்தது. ஆனால், அதுகூட ஒழுகி ஓடுகின்ற நீரில் ஆரல்மீனைப் பிடிக்கும் வேலையில் கவனமாக இருந்தது. தலைவன்தன்னைப்புணர்ந்ததைத் கண்டிருக்காது. கண்டாலும் அதனால் பேசமுடியாது. அவன் மனம் இரங்கி என்னை மணம் செய்தாலன்றி வேறு வழியில்லை என்று புலும்புவதாக இப்பாடல் எடுத்துக் காட்டுகின்றது. இவ்வாறு பெண்களை நம்பி ஏமாற்றிய பல பாடல்கள் சங்க இலக்கியங்களிலே காணப்படுகின்றன.

> **தொல்காப்பியர் பெருந்திணையிலே**
> **ஏறிய மடற்றிறம் இளமை தீர்த்திறம்**
> **தேறுதல் ஒழிந்த காமத்து மிகுதிறம்**
> **மிக்க காமத்து மடலொடு**
> **தொகைஇச்**
> **செப்பிய நான்கும் பெருந்திணைக்**
> **குறிப்பே என்கிறார்.**

ஒருத்தியின் காதலைப் பெறுவதற்காக மடலேறி அவளைத் திருமணம் செய்தல். நான் இதை மடலேறுதல் என்னும் கட்டுரையிலே பெண்ணை மிரட்டித் திருமணம் செய்யும் ஒரு சூழ்ச்சி என்று எழுதியிருந்தேன். இளமை தீர்த்திறம் என்றால், தனக்கு இளமைப் பாலியலுணர்வு நீங்கிய மலட்டு நிலையிலும் ஒருத்தியைப் பாலியலாகத் துன்புறுத்துதல், அத்தோடு பிறன் மனைமீது தேற்ற முடியாத காமத்தில் வேட்கையுறுதல், மிக்க காமத்தில் காணும் பெண்களிடமெல்லாம் வன்புணர்ச்சியை விரும்புதல் இவையெல்லாம் பெருந்திணையின் இலக்கணம்

28 ஆம் பக்கம் பார்க்க...



விளம்பரம் அறிமுகம் செய்யும். தரம் அதை நிலைபெறச் செய்யும்.



# மனிதனும் எழுத்தும்



நாட்டிய கலாநிதி
கார்த்திகா கணேசர்
(அவுஸ்திரேலியா)

மனிதனானவன் மிருகநிலையில் இருந்து வேறுபடுத்துவதற்கு முதல் காரணமாக இருந்தது அவனது குரல்வளையில் மாற்றம் ஆகும். அம்மாற்றத்தால் அவனால் மற்றவர்களுடன் தொடர்பு கொள்ளக்கூடியதாக இருந்தது. தொடர்பு கொண்டு பேசுவதாலேயே அவன் பல காரியங்களைச் சாதிக்க முடிந்தது.

மனித வளர்ச்சி பேசுவதுடன் நின்றுவிடாது தான் கண்டவற்றைக் கைகளைக் கொண்டு வரைந்தான். அதை இன்றும் நாம் மலைக் குகைகளிலே காணக்கூடியதாக உள்ளது.

கையின் உதவி கொண்டு வரையத் தொடங்கிய முயற்சியும் வளர்ச்சியும் மனிதனிடம் எழுத்துருவைத் தோற்றுவிக்க அடிப்படையாக அமைந்தது.

தனக்கு வேண்டியவற்றை நினைவிலே மட்டும் பதித்து வைத்திருந்தால் போதாது அதனை எழுத்துருவிலும் பதிக்க வேண்டும் என்ற தேவையும் காலப் போக்கில் ஏற்பட்டது. களிமண்ணால் செய்த படிமங்களிலே அவை ஈரமாக இருக்கும் போதே குச்சிகளால் எழுதிக், காயவைத்து அல்லது சூளையில் சுட்டு அவற்றைப் பத்திரப்படுத்தும் பழக்கம் காலஓட்டத்தில் ஏற்பட்டது. இவற்றில் காலத்தால் அழிந்து போகாதவை சில இன்றும் தொல்பொருள் காட்சிச்சாலைகளிலே கப்பாற்றப்பட்டு வருகின்றது. இவை பல ஆராய்ச்சிகளுக்கும் உதவுவனவாகவும் உள்ளன.

இந்த எழுத்தின் உருவும் அவர்கள் எதில் அவற்றை எழுதி வைக்கிறார்கள் என்பதைப் பொறுத்து எழுத்தின் உருவும் வளைந்து கொடுக்கவேண்டி இருந்தது. நாகரிகம் வளர வளர யாவற்றையும் எழுத்துக் கணக்கில் வைக்க வேண்டும் என்ற அத்தியாவசியம் ஏற்பட்டது.

நாகரிக வளர்ச்சி ரொக்கட் வேகத்தில் வளரும் போது வியாபாரம் பெருகுகிறது. வியாபாரத்துக்கு முக்கியமாக வேண்டி இருப்பது கொடுக்கல் வாங்கல் பற்றிய கணக்கு வழக்கு. கணக்கினைச் சரியாக வைக்க வேண்டுமானால் யாவற்றையும் வாய்மொழியால் வைத்திருக்க முடியுமா? அதனால் எங்கோ எழுதி வைக்கவேண்டிய அவசியம் ஏற்பட்டது.

அரசுகள் தோன்றி இராச்சிய பரிபாலனம் போன்ற பல விஷயங்களின் மேம்பாடும் எழுத்தறிவை மேலும் வளர்த்தது. இன்று போல் யாவரும் எழுதப்படிக்கத் தெரியவேண்டும் என்ற நிலை அன்று இருக்கவில்லை. படிப்பது என்பது சமுதாயத்தில் ஒருசிலராலேயே முடியுமான காரியமாக இருந்தது. இன்றுபோல என்ன Ballpoint பேனாவும் தாளும் இருந்த காலமா அது?

எமது முன்னோர்கள் குருத்துப் பனை ஓலையை நறுக்கி எடுத்து, அதற்கு மஞ்சள் பூசி, அதிலே எழுதினார்கள். அவற்றை நூல் கொண்டு கட்டி வைத்தனர். (ஓலைக்கு மஞ்சள் பூசுவது அவற்றைப் பூச்சிகள் அரிக்காமல் இருப்பதற்காக) இதை ஏட்டுச் சுவடி என்பார்கள். இதில் எழுத்தாணி கொண்டு தான் எழுத முடியும். இந்த எழுத்தாணியைக் கொண்டு எழுதும் போது க், ட்,ச் போன்ற எழுத்துக்களுக்கு குத்துகள் போட முடியாது. இதற்குக் காரணம் நாம் குத்துகளைப் போடும் போது ஓலையினால் ஆன ஏட்டுச் சுவடியிலே துளை ஏற்பட்டு விடும். இதனால் ஓலையினாலான ஏட்டுச் சுவடியிலே குத்து, முறி எதுவும் காணப்படாது. தமிழ் தெரிந்த யாவரும் ஏட்டுச் சுவடிகளில் இருக்கும் தமிழை படித்து விடலாம் என்றும் சொல்ல முடியாது.



குத்து, முறி எதுவும் இல்லாத இந்தத் தமிழ் எழுத்துக்களை வாசிப்பதற்கு ஒரு தனித் திறன் வேண்டும்.

உதாரணத்திற்கு முந்தநாள் என எழுத வேண்டுமானால் 'ந்' இற்கு இருக்க வேண்டிய குத்து இராது. இதனால் வாசிப்பவர் அச் சொல் என்ன சந்தர்ப்பத்தில் எழுதப்பட்டது என்பதைப் புரிந்து கொண்டு அதற்கிசைவாக இச் சொல்லை உச்சரித்துப் பொருளைப் புரிந்து கொள்ள வேண்டும். சாதாரணமாக நேரடியாக இதனை வாசிக்க நேரின் அது, 'முநதநாள' என்றே இருக்கும்.

இவைகள் எல்லாம் வசன நடை கைவந்த பின்பான நிலை. இவ் வசன நடை பிற்பட்ட காலத்திலேயே வந்தது. அதற்கும் முன்னாலே எல்லாம் மனனம் பண்ணக்கூடிய செய்யுள், கவிதை உருவிலேயே எல்லாம் இருந்தது. இதைப் பாவிப்பவர்கள் பலரும் தமக்குத் தேவையானவற்றை மனனம் பண்ணி வைத்திருப்பர்.

எனது பாட்டியின் தந்தையார் ஓர் ஆயுள்வேத வைத்தியர். இவரிடம் இந்த ஓலைச் சுவடிகள் - வைத்தியத்திற்கு வேண்டியது - இருந்தது. தந்தையாருக்கு கண்ணிலே வெள்ளை பூத்து வந்தது. அதுதான் இந்த 40,45 வயதுகளில் நாம் வாசிப்பதற்குப் பாவிக்கும் கண்ணாடி போடும் காலகட்டம் அது. அப்பொழுதெல்லாம் இப்பொழுது மாதிரி கண்ணாடி இருந்ததா? அல்லது அப்படி அந்தக் காலத்து கண்ணாடி கொண்டு இந்த ஏடுகளைத் தான் படித்துவிட முடியுமா?

பாவம், கிழவர் மகளின் உதவியை நாடினார். பாட்டியும் அவற்றை வாசித்து மனனம் பண்ணிக் கொண்டார். பிற்காலத்தில் பாட்டியிடம் பலர் வைத்திய உதவி பெற வருவதுண்டு. பாட்டி பாட்டாகவே மூலிகைகளின் பெயரைப் பாடி, குடிநீர் கடையில் வாங்க வேண்டிய பொருட்களைச் சொல்லி விடுவார். இங்கு நாம் கவனிக்க வேண்டியது பாட்டி மனனம் பண்ணி வைத்து பாடியதை. காரணம், ஓலைச்சுவடி பிரதியெடுப்பது என்பது பெரிய கஷ்டமான வேலை. இதனால் பலரும் அன்று மனனம் பண்ணவே கற்றுக் கொண்டார்கள்.

இவ்வாறு ஏட்டுச் சுவடிகளில் எழுதி வைத்த பாடல்களே இன்றும் எமது வழிபாட்டுக்குரிய தேவாரங்கள். பல நூற்றாண்டு காலமாக இதை வாய் வழியாகவே கேட்டு மனப்பாடம் பண்ணி வருகிறோம் அல்லவா? 63 நாயன்மார்களின் வாழ்க்கை கதையான பெரிய புராணத்தை ஏட்டில் இருந்து பெரிய புராணமாகப் நூலிலே பதிப்பித்தவர் ஈழத்து நல்லூரைச் சேர்ந்த ஆறுமுக நாவலரே! இன்றெல்லாம் நாம் தமிழரின் நாகரிகச் சின்னம் எனப் பெருமை பேசும் கம்பராமாயணமும் திருக்குறளும் சிலப்பதிகாரம், அகநானூறு, புறநானூறு முதலியனவும் புலவர்கள் பண்டிதர்கள் என்போரிடம் இருந்த ஓலைச் சுவடிகளே. பிற்காலத்தில் பலரால் முயன்று சேர்க்கப்பட்டும் பதிப்பித்தும் நூலுருப்பெற்றன.

தமிழ் தாத்தா எனப் போற்றப்படும் உ.வே. சாமிநாதையர் நூல் நிலையம் ஒன்று அடையாறில் உண்டு. இதை ஒரு நாள் பார்க்கும் வாய்ப்பு எனக்குக் கிட்டியது. இவர் சிலப்பதிகாரத்தை பதிப்பிப்பதற்காக கால்நடையாக தமிழ்நாடு முழுவதும் திரிந்து சேர்த்த ஓலச்சுவடிகளை நான் அங்கு கண்டேன். அவற்றை எல்லாம் அவர் ஒப்பு நோக்கி அவர் எடுத்த கையெழுத்துப் பிரதியும் அங்கு இருந்தது. கையெழுத்துப் பிரதி ஒரு பெரிய புத்தகத்தில் தொட்டு எழுதும் மை கொண்டு மணி மணியான எழுத்துருவில் அதனை அவர் பிரதி பண்ணி இருந்தார். இவ்வாறு ஒரு தனி மனிதனின் உழைப்பாலேயே இன்று எமக்கு சிலப்பதிகாரம் முதலான தமிழ் இலக்கியச் செல்வங்கள் கிடைத்துள்ளன. இதைப்பார்த்ததும் என்கண்ணில் நீர் மல்கியது. தமிழ் இலக்கியத்தைப் படிப்பவன் எவனும் இந்த தெய்வத்திற்கு என்றென்றைக்கும் கடமைப்பட்டவனே.

'சுவிஸ் மக்களின் நம்பிக்கையான காப்புறுதிகளுக்கும், ஓய்வுகாலத் திட்டமிடலுக்கும் நிபுணத்துவ வழிகாட்டி கல்லாறு சதீஷ்"



Aadaa Finance GmbH
Dr. (h.c) Nageswaran Arulrasa D.Litt (CEO)
Eidgenössische finanzmarktaufsicht Nr.35302
Fachmann Für Versicherung & Vorsorge
Hauptstrasse 54, 6015 Luzern, Switzerland
079 8000 100 | arulnages@yahoo.com

aaDaa Finance 0798000100



finma : 34598 cicero : 25605

# யேர்மனியில் தமிழர் தெருவிழா

## அது எதிர்காலத்தில் தமிழர் பெருவிழாவாக மலரும்!



















### முதல் தமிழர்தெருவிழா 2018 ம் ஆண்டு ஆரம்பித்தவேளை வெற்றிமணி இட்ட தலைப்பு இது!

மேடை நிகழ்வுகளை முற்று முழுதாக இளையோரே தொகுத்து வழங்கினார்கள். ஆடல், பாடல் என்று கலை நிகழ்வுகள் மிகச் சிறப்பாக இருந்தன. தெருவிழா சிறப்பாக நடைபெற்றது குறித்த மகிழ்ச்சியை கலைஞர்கள் வெளிப் படுத்தினார்கள். பல பெரியவர்களும், இளையோரும் அங்கு துப்பரவுப் பணிகளில் ஈடுபட்டார்கள். தெரு விழா அனைத்துத் தமிழர்களுக்கும் உரியது என்பதை உணர்ந்து தானாக வந்து சேர்ந்தவர்கள் அவர்கள். அப்படியானவர்கள் இருப்பதனாலேயே இப்படி ஒரு பெரும் விழாவை வெற்றிகரமாக செய்ய முடிந்திருக் கிறது. தெருவிழாவினை உன்னிப்பாக அவதானிக்கும் வெற்றிமணியின் ஆசை,வெகுவிரைவில் பத்தாயிரம் மக்களை வருவிக்கும் ஒரு விழாவாக அது அமைய வேண்டும் என்பதே. அது அமையவேண்டும் என்ன? அமையும் என நம்பலாம். இன்று அது நிஜயமாகி வருவது கண்டு மகிழ்கின்றோம்.2018,2019,2021 ஆண்டுகளில் இடம்பெற்ற விழாக்காட்சிகள்.

25 ஆம் பக்கம் பார்க்க...




விளம்பரம் அறிமுகம் செய்யும். தரம் அதை நிலைபெறச் செய்யும்.

# யேர்மனியில் தமிழர் தெருவிழா

## அது எதிர்காலத்தில் தமிழர் பெருவிழாவாக மலரும்!

















# நல்லூரும் சிவப்பு வேட்டியும், சால்வையும்

**லலீசன் (இலங்கை)**

நல்லூர் கந்தசுவாமி கோவில் பெருந் திருவிழா ஆரம்பமாகி நடைபெறுகிறது ஆலயத்தில் சுவாமி காவும் தொண்டர்கள் சிவப்புச் சால்வை கட்டி இருக்க வேண்டும் என்பது இறுக்கமான நடைமுறை. அது கோவில் நிர்வாகம் சார்ந்த விடயம்.

ஆலய வழிபாட்டுக்கு உகந்தவை வெண்மை சார்ந்த நிறங்களே ஆகும். இது வழிபாட்டுக்கு உகந்த சாத்வீக குணத்தை தூண்டவல்லது.

நல்லூர் எசமான் வெள்ளை வேட்டி வெள்ளை சால்வையை அணிந்தவராகவே காட்சி தருகிறார். முன்னைய நாள்களில் அவரைப் பார்த்து வெள்ளை வெள்ளை அணிந்து ஆலயத்திற்கு ஆண்கள் வந்தனர்.

சுவாமி காவும் தொண்டர்களுக்காக ஒதுக்கப்பட்ட சிவப்பு சால்வை கலாசாரம் இந்த ஆண்டு (துனித்து அடையாளப்படுத்தும் தேவை இல்லாத) ஏனைய ஆண் பக்தர்கள் பலரிடம் தொற்றுகை அடைந்து வருகின்றமையைக் காண முடிகிறது.

ஆலய வழிபாட்டுக்கு அதிலும் மனதுக்கு இதமான பக்திசார் சுகானுபவத்தை வழங்கும் நல்லூரில் - கடந்த காலங்களைப் போல - வெள்ளை பரமாஸ் வேட்டி வெள்ளை சால்வை என்ற அடையாளத்தையே பக்தர்கள் தொடர்ந்து பின்பற்றுவது ஆரோக்கியமானது. ஆண்கள் யாராக இருந்தாலும் வெள்ளை வேட்டி அதுவே எமது அடையாளம்.

**படங்கள் நன்றி: மதன் சிவா ( யேர்மனி),**
**டாக்டர் கே.முருகானந்தன் இலங்கை**




விளம்பரம் அறிமுகம் செய்யும். தரம் அதை நிலைபெறச் செய்யும்.

# இங்கையில் இலக்கு வைக்கப்படும் திருக்கோணேஸ்வரம்

கட்டுவதற்கு திணைக் களம் இடை யூறுகளை விளைவித்து வருகிறது. தற்போது இந்திய அரசாங்கத்திடம் திருக்கோணேஸ்வரத்தின் பாரிய திருப் பணி வேலைகளை நிறைவேற்றித் தருமாறு ஆலய அறங்காவலர் சபையும் இந்து சமய நிறுவனங்களும் வேண்டு தல் விடுத்து அவை சாதகமாக அமைய உள்ள நேரத்தில் திட்டமிட்டு ஆலய சுற்றாடலை அபகரிக்கும் நோக்கில் நிரந் தரக் கடை களை கட்டுவதற்கு முன்வந்து ள்ளனர். இந்த விடயத்தைக் கருத்தில் கொண்டு சகல தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர் களும் திருகோணமலை திருக்கோணேஸ்வரர் ஆலய திருப்பணி வேலைகள் நடைபெறுவதற்கும் அதே வேளையில் அங்கு அவசரமாக கட்ட ப்படவுள்ள வாணிப கட்டடங்களைத் தடுத்து நிறுத்த வும் உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனக் கோரிக்கை முன்வைக் கப்பட்டுள்ளது.

திருகோணமலை திருக்கோணேஸ்வரர் ஆலய சுற்றாடலில் சிங்களவர்களுக்கான கட்டட நிர்மாணப்பணிகள் சுதந்தி ரமாக நடைபெற்றுவருகின்றன. திருக்கோ ணேஸ்வரர் ஆலய திருப் பணியை மட்டும் தொல்லியல் திணைக்களம் தலையீடு செய்து தடுத்து வருகிறார்கள்.

ஒரு பகுதி தொல்லியல் முக்கியத்துவம் வாய்ந்ததாக அடையாளம் காணப்பட்டால், அப்பகுதியை எதிர்கால ஆய்வுகளுக்காக பேணிப் பாதுகாப்பதும், ஆய்வுகளை முன்னெடுப்பதும்தான் தொல்லியல் திணைக்களத்தின் பணி. ஆனால், வடக்கு கிழக்குப் பகுதிகளில் தொல்லியல் திணைக்களத்தின் பணி அவ்வாறாக இருப்பதில்லை. இந்துமத முக்கியத்துவம் வாய்ந்த இடங்களைக் கையகப்படுத்தி அவற்றை சிங்கள – பௌத்த பிரதேசமாக மாற்றுவதுதான் அவர்களுடைய பணியாக இருக்கின்றது.

2009 ஆம் ஆண்டுதான் கோவிலுக் குச் செல்லும் பாதையில் கடைகளை தற்காலிகமாக அமைப்பதற்கு அப்போது



அமைச்சராக இருந்த புஞ்சிநிலமே ஏற்பாடு செய்திருந்தார். தன்னுடைய வாக்கு வங்கியை அதிகரிப்பதற்காக அவர் செய்த திட்டம் இது! இரத்தினபுரி மாவட்டத் தை சேர்ந்த சிங்கள வர்த்தகர்களுக்கே இவ்வாறு இடமளிக்கப்பட்டது. இந்தப் பகுதியை பலாத்காரமாக ஆக்கிரமி த்து 13 வருடங்களாக அவர்கள் அங்கு இருக்கி ன்றார்கள். குறிப்பிட்ட பாதையில் அமை க்கப்பட்டுள்ள இந்தக் கடைகள் அனைத் தும் சிங்களவர்களுக்குச் சொந்தமானது என்பது கவனிக் கத்தக்கது. இந்தக் கடை களை அகற்றுவதற்கு கோவில் நிர்வாகம் மேற்கொண்ட முயற்சிகள் எதுவும் பலனளி க்கவில்லை.

மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் கூட்டம் ஒன்றில் இந்த வர்த்தகர்களுக்கு கோவிலுக்கு முன்பாக உள்ள வாகன தரிப்பிடம் உள்ள பகுதியில் கடைகளை அமைத்துக்கொடுப்பது எனவும், பாதையில் உள்ள கடைகளை அகற்றுவது எனவும் தீர்மானிக்கப்பட்டது. இந்தக் கூட்டத்தில் சம்பந்தன் உட்பட திருமலை மாவட்ட எம். பி.க்களும், தொல்லியல் திணைக்கள அதிகாரிகளும் கலந்துகொண்டிருந் தார்கள். இருந்தபோதிலும் இந்த திட்டம் நடைமுறைப்படுத்தப் படவில்லை. அந்த இடம் தமக்குப் பொருத்தமற்றது என வர்த் தகர்கள் நிராகரித்துவிட்டதுதான் இதற்குக் காரணம். திருக்கோணேஸ்வரம் கோவிலு க்கு அருகில் கடற்கரைப் பக்கமாக சங்கமி த்த பன்சல என்ற பெயரிலான பௌத்த விகாரை ஒன்றுள்ளது. கோணேஸ்வரர் கோவிலுக்கு வருபவர்கள் அந்த பன்சலக் குச் செல்லாமல் நேரடியாக கோவிலுக்கு வருவதுதான் தொல்லியல் திணைக்கள அதிகாரிகளுக்கும் அங்குள்ள பிக்குகளுக் கும் இப்போதுள்ள பிரச்சினை. இதனால், குறிப்பிட்ட பன்சலைக்கு சென்று அங்கி ருந்து கோணேஸ்வரர் கோவிலுக்கு வருவத ற்கான பாதை ஒன்றை அமைப்பதற்கும், அந்தப் பகுதிக்கு சிங்களவர்களின் கடைக ளைக் கொண்டு செல்வதற்கும் இப்போது திட்டமிடப்படுகின்றது. இதற்காக சிங்கள வர்த்தகர்களுக்கு காணியை நிரந்த ரமாகக் கொடுப்பதற்கு தீர்மானிக் கப்பட்டுள்ளது. இதன்மூலமாக குறிப்பிட்ட பகுதியை சிங்கள மயமாக்கும் நீண்டகா லத் திட்டத்துடன்தான் அரச ,யந்திரம் செயற்படுகின்றது.

திருக்கோணேஸ்வரத்தைப் பொறுத் தவரையில் சிங்கள வர்த்தகர்களுக்காக கட்டடங்களை அமைத்துக்கொடுப்பதற்கோ அல்லது – கோவில் நிர்வாகத்தில் தலையிடுவதற்கோ எந்தவிதமான அதி காரங்களும் தொல்லியல் திணைக்கள த்துக்கு இல்லை. இருந்தபோதிலும் கோவில் நிர்வாகத்துடன் கடந்த வாரம் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் தொல்லியல் திணைக்கள அதிகாரிகள் தமது எல்லை யை மீறிச்செயற்பட்டிருக்கின்றார்கள். ”இந்த புதிய திட்டத்தை நடைமுறைப் படுத்துவதற்கு உங்களுடைய அனுமதி எமக்குத் தேவையில்லை. ஆனால், பிரச்சினை இருக்கக்கூடாது என்பதற்காக உங்களுடன் இது தொடர்பில் பேசுகிறோம்” என அச்சுறுத்தும் பாணியில் தொல்லியல் திணைக்கள அதிகாரிகள் நடந்து கொண்டிருக்கின்றார்கள்.

குறிப்பிட்ட காணி உண்மையில் கோணேஸ்வரார் கோவிலுக்குச் சொந்த மானது. அது தொல்பொருள் முக்கியத் துவம் வாய்ந்த ஒரு பகுதி என்பதால் அதனைப் பேணிப்பாதுகாக்கும் பொறு ப்பு மட்டுமே தொல்பொருள் திணைக் களத்துக்குள்ளது. ஆனால், அந்தக் காணிக்கான உரிமை தமக்குள்ளது போலவும், கோணேஸ்வரர் கோவில் தமக்கு கட்டுப்பட்டது என்பது போலவும் தான் தொல்பொருள் திணைக்கம் இப் போது செயற்படுகின்றது எனக் குற்றஞ் சாட்டுகின்றார் கோவில் நிர்வாகி ஒருவர்.

திருகோணமலை மாவட்டத்தில் 64ஆம் கட்டை பகுதியில் இராஜவந் தான் மலை உள்ளது. இந்த மலையில் அகத்தி யமா முனிவர் சிவலிங்க வழி பாட்டில் ஈடுப்பட்டுள்ளார். இந்த சிவலிங்கமும் வழிபாட்டுத்தலமும் அகற்றப்பட்டுள்ள. அங்கு பௌத்த விகாரை ஒன்று அமைக் கப்படுகிறது. கொட்டியாபுரம் என்ற பெயரை திரிபு படுத்தி கொட்டியா ராம விகாரை என்ற பெயரில் இந்த ஆக்கி ரமிப்புக்கள் முன்னெடுக்கப்படுகின் றன. இதற்கு இராணுவமும் அர சா ங்க அதிபரும் துணை நிற்கிறார்கள். இராஜவந்தான் ஆலயத்தை புனரமை ப்பது தொடர்பில் அரசாங்க அதிபருடன் பேசுகையில் அவ்விடயம் தொடர்பில் பௌத்த பிக்குவிடம் பேச்சுவார்த்தை யினை முன்னெடுக்குமாறு அரசாங்க அதிபர் கூறுகின்றார். அரசாங்க அதிபரை விடவும் பிக்கு அதிகாரம் உள்ளவராக தீர் மானிக்கும் சக்திவாய்ந்தவராக உள்ளார் என்பதை இது உணர்ததுகின்றது.

அரச இயந்திரங்களின் பலத்துடன் இராணுவம், பொலிஸ் பாதுகாப்புடன் தொல்லியல் திணைக்களம் சிங்கள மயமாக்கலை தீவிரப்படுத்தியிருக்கும் பின்னணியில் தமிழ்த் தலைவர்கள் எனப்படுபவர்கள் வெறுமனே அறிக்கை களை வெளியிடுவதுடன், பாராளுமன்ற த்தில் பேசுவதுடன் தமது கடமை முடி ந்துவிட்டதாக இருக்கின்றார்கள். ■


## வெற்றிமணி திருமண சேவை






யேர்மனியில் மான்கைமில் Wirchaftsingenier ஆக வேலை செய்யும் 33 வயது சைவவேளாளர் பெண்ணுக்கு ஏற்ற மணமகன் தேவை. பட்டதாரி மணமகன், 100 K.M தூரத்துக்குள் விரும்பத்தக்கது.

பெற்றோர் மட்டும் தொடர்பு கொள்ளவும்.

தொடர்புகளுக்கு:- +4915774318528

யேர்மனியில் கற்றிங்கன் நகரில் Gymnasium ஆசிரியையாக பணிபுரியும் நற்குணமுடைய சைவவேளாளர் 28 வயது பெண்ணிற்கு ஏற்ற மணமகன் தேவை. பட்டதாரி மணமகன் 100 K.M தூரத்துக்குள் வரவேற்கிறோம்.

பெற்றோர் மட்டும் தொடர்பு கொள்ளவும்.

தொடர்புகளுக்கு +4915774318528




அன்பும் அறனும் உடைத்தாயின்
இல்வாழ்க்கை பண்பும் பயனும் அது

# முதியோர்கள் மூலமான இளையோரை கொண்ட ஒரு நல்லிணக்கப் பயணம்



முதியோர்கள் என்பதும் எம்மைப் போன்ற மனிதர்களே இவர்களை பாதுகாப்பதும் பராமரிப்பதும் ஒவ்வொரு குடும்பங்களின் பாரிய பொறுப்பாகவுள்ளது இருந்த போதிலும் வயது முதிர்ந்த போதிலும் அவர்களை கைவிட்டு வீதிகளிலும் ஏனைய பராமரிப்பற்ற இடங்களிலும் தடுமாறுவதை அவதானிக்க முடிகிறது. சிலர் முதியோர் இல்லங்களில் பராமரிக்கப்படுகிறார்கள். இவ்வாறான முதியோர்களை பராமரிப்பது தொடர்பிலும் இலங்கையிலும் பல நடவடிக்கைகள் காணப்பட்டாலும் முழுமை பெறவில்லை. இதன் ஒரு கட்டமாக IDove ,African union ,German coopration மற்றும் GIZ ஆகிய விழுது எனும் அரசசார்பற்ற நிறுவனத்துடன் இணைந்து முதலாவது செயற் திட்டமானது சர்வமத இளைஞர் யுவதிகளின் பங்கேற்புடன் திருகோணமலையில் உள்ள சென் ஜோசப் முதியோர் இல்லத்தில் முதியோர்களை மகிழ்வூட்டல் செயற்பாடும், சிரமதான நிகழ்வும் (2022.08.16) அன்று இடம் பெற்றது.

விழுது ஆற்றல் மேம்பாட்டு மையம் இதனை சிறப்பாக ஏற்பாடு செய்திருந்ததுடன் இதில் குறித்த முதியோர் இல்லத்தின் கீழ் பராமரிப்பின் கீழ் உள்ள 35 முதியோர்கள் இல்ல பொறுப்பாளர்களான அருட்சகோதரிகள், விழுது நிறுவன இளையோர்கள், விழுதின் சிரேஷ்ட சமுதாய ஒருங்கிணைப்பாளர் அபிவர்னா வர்ணகுலசிங்கம், உளவளத்துணையாளர் திருமதி கொன்சலின் மாவளன் ஆகியோர்கள் பங்கேற்றிருந்தனர்.



ஹஸ்பர் ஏ ஹலீம்

சிறந்த ஒழுங்குபடுத்தலின் கீழ் முதியோர் இல்ல புறச்சூழல் பகுதிகளை சிரமதானங்களை மேற்கொண்டதுடன் ஆரம்ப நிகழ்வான



வரவேற்பு நடனம் இடம் பெற்றதுடன் வரவேற்புரையானது திருகோணமலை விழுது இளையோர் மெல்ரோய் அவர்கள் வழங்கியதுடன் விழுது அமைப்பு முன்னெடுத்து வரும் செயற்திட்டங்கள் தொடர்பாகவும் இந் நிகழ்வினை மேற்கொள்ளும் GIZ செயற் திட்டம் தொடர்பான அறிமுகத்தினை திருகோணமலை விழுது சமூக ஒருங்கிணைப்பாளர் அபிவர்னா வழங்கியதோடு முதியோரின் சமூக வகிபங்கின் அவசியம் மற்றும் மத நல்லிணக்கத்தில் முதியோர்,இளைஞர்களின் ஒருங்கிணைந்த செயற்பாட்டின் அவசியம் பற்றியதை இளையோர் சார்பாக கேசிகன் தெளிவுபடுத்தினார்.

குறித்த நிகழ்வை தொடர்ந்து விளையாட்டுக்களின் மூலமாக தாம் தெரிவு செய்த இலக்கத்திற்கான விடயத்தினை நடித்தும் கதை மூலமாகவும் ஏதாவதொரு வெளிப்பாட்டின் மூலமாக பார்வையாளரவுள்ள இளையோர் மற்றும் ஏனைய முதியோர்களுக்கு வெளிப்படுத்துமாறும் கேட்டுக் கொண்டதிற்கிணங்க தமது கலை உணர்வுடன் மதங்கள் சார்ந்து தாம் கொண்டுள்ள ஈடுபாட்டினை பகிரக் கூடியதாக இருந்தது.

குறிப்பாக முதியோராக மதம் சார்ந்து கொண்டுள்ள ஈடுபாடு பிற மதம் சார்ந்து கொண்டுள்ள மரியாதை இளையோருக்கு முதியவராக நீங்கள் மதம் சார்ந்த அறிவுரை பிற மொழி சார்ந்த ஒருவரிடம் உதவியை நாடும் போது அவற்றை எவ்வாறு அனுகுவீர்கள் போன்ற விடயங்களை தம்மால் இயன்ற வரை வெளிப்படுத்த முயற்சித்து காட்டினார்கள் என்பது இவ்வாறான நிகழ்வுகள் ஊடாக தெளிவாக புரிந்து கொள்ளப்பட்டது.



சமூகத்தில் மத நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதில் வலுச்சேர்க்கும் இளையோர்களுக்கு வழி காட்டும் முதியோரில் அனுபவப் பகிர்வு மற்றும் ஆலோசனை போன்றவற்றை இந் நிகழ்வு மேலும் திறம்பட வலுப்படுத்தியிருந்தது. சிறந்த ஒழுங்குபடுத்தலின் கீழ் முதியோர் இல்ல புறச் சூழல் பகுதிகளை சிரமதானங்களை மேற்கொண்டதுடன் முதியோர் மற்றும் இளையோர்களை இனம் மதம் மொழி கடந்து கலை உணர்வுகளோடு கூடிய கருத்தாடல் ஆழமான களமாக அமைந்திருந்தது. குறிப்பாக ஒவ்வொரு நிகழ்வுகளும் இளையோர்க்கும் முதியோர்க்குமான பிணைப்பினை வலுவூட்டியதுடன் நாமும் இத்தைகயதொரு மத நல்லிணக்கத்தை பின்பற்றியே முதியோர் இல்லத்தில் ஒற்றுமையாகவும் மகிழ்ச்சியாக வாழ்வதாகவும் சமூகத்தினை கட்டியெழுப்பும் இளையோர்க்கு இம் முதியோர் இல்லம் சிறந்த எடுத்துக்காட்டு என்பதையும் இளையோராக நீங்கள் ஒன்று சேர்ந்திருப்பது ஒட்டு மொத்த இளையோர்களுக்கும் வழி காட்டிகளாக அமைய வாழ்த்துவதாகவும் முதியோர்கள் தமது கருத்தாடல்களில் இதன் போது பதிவிட்டிருந்தனர்.

திருகோணமலை மாவட்டம் என்பது மூவின சமூகங்களை சேர்ந்த ஒரு இயற்கை வளம் கொண்டதாக இருந்த போதிலும் முதியோர்களுக்கான இல்லம் அவர்களை பராமரிப்பதற்காய் அமைந்துள்ளதுடன் இவ்வாறான நிகழ்வுகள் அவர்களை சந்தோசத்தில் ஆழ்த்தியுள்ளது மனச் சோர்வுடன் சில வேலைகளில் உளதாக்கங்களுடன் இருந்த போதிலும் உளவளத் துணை ஊடான பல கலை நிகழ்வுகள் சிறிய ரக விளையாட்டுக்கள் அவர்களை உடல் உள பீதியாக உளச் சுகாதாரத்தை வெளிப்படுத்தக்கூடிய வகையில் அமைந்திருக்கும். ஒவ்வொரு வருடமும் ஒக்டோபர் முதலாந் திகதி முதியோர் தின நிகழ்வாக இருந்தாலும் அது தவிர முதியோர்களை இன நல்லிணக்க மதச் சார்பின்றி இவ்வாறான திட்டங்களை கொண்ட நிகழுவுகள் ஊடாக வலுப்படுத்துவதன் ஊடாக முதியோர் இல்லங்களின் பராமரிப்பில் சக்தி மிக்க நம்பிக்கையை ஊட்ட முடியும். வயோதிபக் காலங்களில் முதியோர்களுக்காக முதியோர் செயலகம் அரச மட்டத்தில் 70 வயதினை பூர்த்தி செய்த வருமானம் குறைந்தவர்களுக்கான மாத கொடுப்பனவு அடையாள அட்டை ஊடான சேவை என பல சேவைகள் வழங்கப்பட்டும் வருகின்றது அது போன்று அவர்களுக்கான கொள்கையும் சில வரையறுக்கப்பட்டு இதில் காணப்படுகிறது இது தவின அரச சார்பற்ற நிலையில் இவ்வாறான திட்டங்



களை இளையோர்களின் பங்களிப்பில் அமுல்படுத்துவது வரவேற்கத்தக்கது இன்றைய இளையோர்கள் நாளைய தலைவர்களாக வரவிருக்கிறார்கள் இதற்கான ஒத்துழைப்பினையும் முதியோர்களுக்காக நம் தாய் தந்தை போன்று அவர்களுக்காய் உதவ இத் திட்டம் ஊடாக பங்களிப்பை வழங்குவோம்.




விளம்பரம் அறிமுகம் செய்யும். தரம் அதை நிலைபெறச் செய்யும்.

22 ஆம் பக்கத் தொடர்ச்சி...

## நீ விரும்பினாலும் விரும்பாவிட்டாலும்...

என்று தொல்காப்பியர் எடுத்துக் காட்டியுள்ளார்.

**மேவேம் என்பாரையும்**
**மேவினன் கைப்பற்றும்**
**மேவினும், மேவாக்கடையும்,**
**அஃது எல்லாம்**
**நீ அறித் யான் அஃது**
**அறிகல்லேன் பூ அமன்ற**
**மெல் இணர் செல்லாக் கொடி**
**அன்னாய்! நின்னை யான்**
**புல் இனிது ஆகலின்,**
**புல்லினென்“ எல்லா!**
**தமக்கு இனிது என்று,**
**வலிதின் பிறர்க்கு இன்னா**
**செய்வது நன்று ஆமோ மற்று**
**என்று தொடரும் பாடலிலே**

ஏ இவன் ஒருவன் கொஞ்சமும் வெட்கம் இல்லாதவன் அவனை விரும்பவில்லை என்று சொல்பவரையும் விரும்பியவனாகக் கையைப் பற்றி இழுக்கிறான் என்பதற்கு அவன் சொல்கிறான் நீ விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் அது உன்னோடு இருக்கட்டும். அது எனக்குத் தெரியாது. பூத்திருக்கும் கொடி போன்றவள் நீ. உன்னைத் தழுவினால் எனக்கு இன்பமாக இருக்கிறது. அதனால் அணைத்துக்கொண்டேன் என்றும், தண்ணீர் தாகம் எடுத்து தண்ணீர் குடிப்பவர்கள் தண்ணீரைக் குடிப்பதால் தனக்கு இனிமையாக இருக்கிறது என்றுதான் குடிப்பார்களே அன்றி தண்ணீருக்கு இனிமையாக இருக்கும் என்று நினைத்துக் குடிக்க மாட்டார்கள் என்று கூறும் ஆண்மகனின் வன்முறையும் இப்பாடலில் எடுத்துக் காட்டப்பட்டுள்ளது. இவ்வாறான வாழ்வியல் முறையில்

**பொய்யும் வழுவும்**
**தோன்றிய பின்னர**
**ஐயர் யாத்தனர் கரணம் என்ப**

என பொய்யையும் பிழையையும் கண்ணுற்றதன் பின்தான் திருமண முறை எம்மிடையே வழக்கத்தில் வந்தது.

எனவே அன்று இணையம் இல்லாத காரணத்தால் பாடல்களே மனித மனங்களில் பாலியல் வன்முறையில் மாற்றமில்லை என்பதை எமக்கு எடுத்துக் காட்டுகின்றன. ■

II ஆம் பக்கத் தொடர்ச்சி...

## காதல் திருவிழா

வாறதைக் கண்டு பாத்தும் பாக்கமல் நிக்கிறது தான் முதலாவது சமிக்கை, இதுவே நம்பிக்கையை ஒளியைத் தரும். அவளவை ஒரு நாளும் நிமிந்தோ திரும்பியோ பாக்கமாட்டினம் ஆனாலும் நாங்கள் பின்னால வாறது தெரிஞ்சு கச்சான் கடை, செருப்புக் கடையில கொஞ்சம் கூட நேரம் மினக்கிடிறது எங்களுக்காகவே இருக்கும், இது நம்பிக்கையை தும்பிக்கை ஆக்கும்.

முதல்ல அம்மவோட வந்தவை அம்மாவை விட்டிட்டு பக்கத்து வீட்டு அக்காவோட வாறது நல்ல சமிக்கை. ஏற்கனவே எங்களைப் பத்தி சொல்லப்பட்டிருக்கும் அக்காவுக்கு. வாற அக்கா வடிவா ஏற இறங்க எங்களைப் பாத்து குடுக்கிற report ல தான் முடிவு தங்கி இருக்கும். கடைசீல அக்காவும் வெட்டப்பட்டு ஒரு friend ஓட வருவினம், இப்ப முக்கியம் அந்த கசநைனெக்கு நீங்கள் நல்லவராகத் தெரியிறது.

அந்தப்பக்கம் அம்மா அக்காவாகி, அக்கா friend ஆகேக்க நாங்களும் அந்த பரிணாம வளரச்சிக்கு ஏத்த மாதிரி பலவாகத் தொடங்கி, அக்காவோட வரேக்க ரெண்டாகி, friend ஓட வரேக்க தனியா இருக்க வேண்டும் இல்லாட்டி சில“நல்ல“ நண்பர்களினால் அவளவையின்டை friends reject பண்ணிப் போடுவினம்.

ஆயிரம் பேர் இருந்தாலும் பாத்தோண்ணயே இது தான் எனக்கு எண்டு பெடியள் முடிவெடுத்திடுவாங்கள் ஆனால், பெட்டைகள் அப்பிடி இல்லை. முக்கி முக்கி six pack வைச்சவனையும்,பொக்கற்றுக்க ஆயிரம் ரூபா வைச்சிருந் தவனையும், வடக்கு வீதீல சாமி வரேக்க மடிச்ச சட்டைக்கையோட நான் medical student இல்லாட்டி கம்பஸ் காரன் எண்டு நிக்கிறவனையும் எல்லாம் பாக்காம, நல்லூர் பக்தனா வெறும் மேலோட வாற single pack காரனுக்கு எப்பிடி ஓம் எண்டு சொல்லுறாளவை எண்டிறது முருகனுக்குத் தான் வெளிச்சம்.

என்ன தான் தலைகீழா நிண்டாலும் பல காதல் பயணங்கள் சண்டேஸ்வரர் தேங்காயோட சிதறிப் போக, ஆனாலும் கந்தன் கைவிட மாட்டான் எண்டு அடுத்த முறையும் முருகன்டை வாறவை தான் கனபேர். இன்று ஆறாம் நாள் திருவிழா. ■

07 ஆம் பக்கத் தொடர்ச்சி...

## எந்தமாதிரியான ஆளை எப்படி...

ஏதோவொருவகையில் அன்றாடம் அவசியப்படக்கூடிய அப்ளிகேஷன்களை உருவாக்கி அதனை இலவசமாகவும் கொடுத்துவிடுகின்றனர். நம்முடைய இலகுவிற்க்காக நாமும் அதை பயன்படுத்திக் கொள்கின்றோம்.

இதனால் அந்த “app“ கேற்கும் நம்மைப் பற்றிய தகவல்கள் பலவற்றையும் ஏமனி பண்ணாமல் வழங்கிவிடுகின்றோம். இப்படி எல்லா கேள்விகளுக்கும் பதில் சொல்லி விட்டு இறுதியில் “ I agree“ என்ற button ஐயும் click செய்துவிடுகின்றோம். அந்த I agree என்ற ஒன்றிற்கு முன் என்னவெல்லாம் எழுதியிருக்கின்றது என்பதை யாரும் படித்துப்பார்ப்பதில்லை. பெரும்பாலும் அது ஆங்கிலத்தில் இருக்கும், பக்கம்பக்கமாக இருக்கும் என்பதற்காகவே யாரும் படிப்பதில்லை. ஆனால் அங்கேதான் அவர்கள் மிகவும் தெளிவாக சொல்லியிருப்பார்கள், “இந்த தகவல்களை தேவைப்பட்டால் நாங்கள் யாருடனும்share பண்ணுவோம். இது எங்களுடைய“copyright“இல் உள்ளடங்கும், இதில் உங்களுக்கு சம்பந்தமில்லை “ என சொல்லிவிடுகின்றனர்.

ட்ரில்லியன் மக்களுடைய தகவல்கள் எங்கே போகின்றது , என்ன ஆகின்றது என தனிப்பட்ட ஒருவரால் நிர்ணயிக்க முடியாது அல்லவா ? ஆனால் அந்த வேலையினை datamining என்ற industry செய்துமுடித்துவிடும் . அப்படியானால் இந்த dataவையெல்லாம் சேகரிப்பது யார்? வேறு யார், அமெரிக்காவும், சீனாவும் தான்!ஆக, இனிமேல் நடக்கபோகின்ற யுத்தங்கள் அணு ஆயுதங்களை வைத்து அல்ல,Datait வைத்துதான் யுத்தங்கள் நிகழப்போகின்றன. அந்த காலகட்டத்துக்குள் காலடி எடுத்துவைத்து விட்டோம்.ஆனால் நாம் அதற்குள் பயணித்துக்




கொண்டிருப்பதனை புரிந்துகொள்ளாமல் இருப்பதுதான் நம் அறியாமை.

மனிதர்கள் எல்லோரும் சமமானவர்கள், பொதுவான விதிகள்தான் அனைவர்க்கும் பொருந்தும் என சொல்லப்பட்டாலும் “per sonality disorder“ (ஆளுமைக் கோளாறுகள் ) என சிலர் உண்டு. எல்லோரும் நம்மைக் கவனிக்கவேண்டும், பிரபலம் என்ற வெளிச்சம் நம்மீது விழுந்து கொண்டேயிருக்கவேண்டும் என இவர்கள் நினைப்பர். மற்றவர்களுடைய கவனத்தை ஈர்க்கச் செய்வதென்பது இவர்களுக்கு மிகப்பெரிய “போதை“ போன்றது. இவ்வாறான personality disorder இருப்பவர்களை மருத்துவத்துறையில் histrianic personality disorder , narcissistic personality disorder அல்லது borderline personality dis order எனக்கூறுவர்.இவ்வாறானவர்களின் பொதுத்தன்மை என்னவென்றால் தம்மை ஓர் மிகப்பெரிய பிரபலமாக எண்ணிக் கொண்டு, தம்மை எல்லோரும் முக்கியமானவராக நினைக்கவேண்டும், தம்மீதான வெளிச்சவட்டம் எப்போதுமே தொடரவேண்டும் என நினைக்கும் இவர்கள், அதற்காக எந்தவோர் எல்லைக்கும் செல்லத்துணிவர் (attention seeking). அதிலொன்றுதான் tik tokஇல் அதிகூடிய கவர்ச்சி காட்டுதல், ஒருவரையொருவர் மிகச் சரளமாக கெட்ட வார்த்தைகளால் சாடிக்கொள்வது (இதில் பெண்கள் அதிகமாக ஈடுபடுகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது) குழந்தைத்தனமாக பேசுவது, சாதிப் பெருமைபடிப்பது போன்ற அறிகுறிகள்.

இவ்வாறான மனிதர்கள் எல்லா காலங்களிலுமே தம்மை மிகையாக காட்டிக்கொள்ள முயற்சி செய்வார்கள். இந்தமாதிரியான மனோநிலை கொண்டோரிடம் tiktok போன்றதோர் application கிடைத்துவிட்டால் அவர்கள் அதற்கு அடிமையாகிவிடுகின்றனர். திரும்பத் திரும்ப vedio upload செய்வது, வேறுவேறு கோணங்களில் தம்மைத்தாமே புகைப்படம் எடுத்து பதிவுசெய்துவிட்டு டமைநளகாக காத்துக்கொண்டிருப்பது vd personality disorder இருப்பவர்கள் tiktokl மிகையாக பயன்படுத்திக் கொள்ள வாய்ப்பிருக்கிறது. இந்த பிரச்சினை காலப்போக்கில் என்னவாகுமென்றால், சாதாரணமான மனநிலை கொண்டவொருவரைக்கூட,“ இவர்களுக்கு இத்தனை likes , following கிடைக்கிறது நமக்கு கிடைக்கவில்லையே,நாமும் அவர்களைபோலவே எல்லைமீறி ஏதேனும் செய்தால் என்ன?என்ற போட்டி மனோ நிலையினை ஏற்படுத்திவிடக்கூடிய வாய்ப்புகளை உருவாக்கிவிடுகின்றது. இது ஒருவகையான நோய். யதார்த்தமோ ஆரோக்யமானதோ அல்ல.

சமூக வலைத்தளங்கள் நமது வாழ்க்கையின் ஒரு அங்கமாக மாறிவிட்டன. இனி அதை நம்மிலிருந்து யாரும் அவ்வளவு சீக்கிரத்தில் பிரித்தெடுக்கவியலாது. ஆகவே எந்தவொரு application ஐயும் நாம் பயன்படுத்தலாம் ஆனால் அடிமையாகி விடக்கூடாது.இன்றைய டிஜிட்டல் உலகில் இதையெல்லாம் நான் தொடவே மாட்டேன் என சொல்லிக் கொண்டிருப்போமாயின் நாம் update இல்லாதவர்களாகிவிடுவோம். எனவே இவற்றை பாதுகாப்பாக பயன்படுத்த அறிந் திருக்கவேண்டும். அடுத்த தலைமுறை என்பது இணையத்தோடு இணைந்த தலைமுறையாகவே இருக்கப்போகிறது. ■








விளம்பரம் அறிமுகம் செய்யும். தரம் அதை நிலைபெறச் செய்யும்.

# “இழப்பை ஒரு கொண்டாட்டமாக கொண்டாடும் சேனையூர் மண் போற்றப்பட வேண்டியதே”



வி.மைக்கல் கொலின்
(இலங்கை)

## அனாமிகா பண்பாட்டு மைய, களரி திறப்பு விழாவில் கலைஞர் நாசர்



கடந்த மாதம் சனி, ஞாயிறு (06,07.-09.2022) ஆகிய இரு தினங்களும் நடைபெற்ற சேனையூர் அனாமிகா பண்பாட்டு மைய, களரி திறப்பு விழாவும் மாபெரும் கலை இலக்கிய பெரு விழா நிகழ்வும் பேராசிரியர் அ.சண்முகதாஸ் அவர்களின் தலைமையில் நடைபெற்றது. இந் நிகழ்வில் தொடர்ந்து பேசிய நாசர் அவர்கள் “இன்று சேனையூரில் அமைக்கப்பட்டுள்ள இந்த பண்பாட்டு மையத்தை இங்குள் மாணவர்கள் நன்கு பயன்படுத்திக் கொள்ள வேண்டும். இதே போன்று ஒவ்வொரு பிரதேசத்திலும் அனாமிகா பண்பாட்டு மையங்கள் உருவாக்கப்பட வேண்டும்.

இது ஒரு சரித்திர முக்கியத்துவமான நிகழ்வு. தனது மகளின் இழப்பை ஒரு தந்தை கலையாக மாற்றியுள்ளார். இழப்பிலிருந்து ஓர் புதிய ஆக்கத்தை உருவாக்குவதை நாம் இங்கு காண்கிறோம். அந்த வகையில் இந்த பண்பாட்டு மையத்தின் ஆரம்பகர்த்தா எனது நண்பர் பேராசிரியர் பாலசுகுமார் அவர்களும் அவரது துணைவியாரும் பாராட்டப்பட வேண்டியவர்கள். இழப்பை ஒரு கொண்டாட்டமாக கொண்டாடும் சேனையூர் மண் போற்றப்பட வேண்டியதே“ என்றார்.

பிரதம விருந்தினர்களில் ஒரு வராக கலந்து கொண்ட யாழ். மாவட்ட செயலாளரும் அரசாங்க அதிபருமான திரு.



க.மகேசன் அவர்கள் உரையாற்றுகையில்“ 2004 ம் ஆண்டு ஏற்பட்ட சுனாமி பேரலையில் தனது மகளை பறி கொடுத்த பாலசுகுமார் அவர்கள் தனது மகளின் நினைவாக ஒவ்வொரு வருடமும் திருகோணமலையில் அஞ்சலி நிகழ்வும் மட்டக்களப்பில் அனாமிகா நினைவுப் பேருரையும் நடாத்தி வருகிறார். இழப்பை இலக்கியமாக்கி இன்று அனாமிகாவின் பெயரில் உலகமெங்கும் கலைச் சேவை செய்துவருகிறார். அதன் மறுவடிவமே இந்த அனாமிகா பண்பாட்டு மைய களரி உருவாக்கம். நூலகம், ஆவண காப்பகம், கணனி மையம், மாநாட்டு மண்டபம், கூத்துக் களரி என பல பிரிவுகளை கொண்டு அமைக்கப்பட்டுள்ள இந்த அனாமிகா பண்பாட்டு மையம் சேனையூர் மண்ணுக்கு மட்டுமல்ல கிழக்கிழங்கைக்கே ஒரு வரப்பிரசாதம்“ என்றார்.

இந் நிகழ்வில் கிழக்குப் பல்கலைக் கழக உபவேந்தர் பேராசிரியர் வ.கனகசிங்கம், ஓய்வு நிலை பேராசிரியர் சி. மௌனகுரு, பேராசிரியை மனோன்மணி சண்முகதாஸ்,கிழக்குப் பல்கலைக்கழக சுவாமி விபுலானந்தா அழகியற் கற்கைகள் நிறுவக பணிப்பாளர் கலாநிதி புளோரன்ஸ் பாரதி கென்னடி கிழக்கு மாகாண கலாசார பணிப்பாளர் சரண்யா சுகந்தன் கிழக்கு மாகாண பொதுச் சேவைஆணைக் குழு செயலாளர் திரு.மூ.கோபாலரட்ணம் ஆகியோரும் பிரதம விருந்தினர்களாக கலந்து சிறப்புரை ஆற்றினர்.



காலை கருத்தரங்கு மாலை கலை நிகழ்வுகள் என இரண்டு நாட்களும் ஓர் கலை விழா கொண்டாட்டமாக நடைபெற்ற இவ்விழாவில் கிழக்குப் பல்கலைக்கழக சுவாமி விபுலானந்தா அழகியற் கற்கைகள் நிறுவக மாணவர்களின் இசை நிகழ்வு, மட்டக்களப்பு, மலையகம், யாழ்ப்பாண கலைக் குழுக்களின் வடமோடி, தென்மோடி, வசந்தன், கூத்துகள், இசை நிகழ்வு, கனடாவில் இருந்து கலந்து கொண்ட கலைஞர்களின் ஈழநாட்டிய நிகழ்வு, பேராசிரியர் மௌனகுரு வழங்கிய அஞ்சலி நிகழ்வு, பாலசுகுமாரின் கூத்து பாடல் நிகழ்வு, பறை இசை, இசை நிகழ்வு என பல கலை நிகழ்வுகள் இரவு பத்துமணிவரை நடைபெற்றது குறிப்பிடத்தக்கது.









மாதவி

# அம்மாகட்டிய ரிப்பன்!

இப்பெழுது நாம் அன்று புகையிரத்தில் பயணித்ததை விட அதிகமாக விமானத்தில் பறக்கின்றோம். அப்பொழுதே அம்மா பயணம் புறப்பட்டால், தையல் மிசின் லாச்சிக்குள் ஒரு நிறத்துணி எடுத்து வந்து எனது சூக்கேசின் கைபிடியில் கட்டிவிடுவா.

இல்லை என்றால் பொல்காவலையில் யாரும் ஒரே மாதிரி சூட்கேஸ் என்று மாறி எடுத்து போடுவினம். என்று அம்மா சொல்வா.

அதற்கு நான் சொல்வேன், மாறினால் என்ன எடுப்பவர் தனது சூட்கேசை விட்டுவிட்டுதானே போவார் அற்குள்ளும், பனங்கிளங்கு, முருக்கங்காய், உழுத்தம்மா, இராசவள்ளிகிளங்கு, மற்றது இடியப்பமும் உருளைக்கிழங்கு கறியும் வாழையிலையில் போட்டு தினசரி பேப்பரில் கட்டி இருக்கும். இதில் எந்த சூட்கேஸ் ஆனால் என்ன என்று அம்மாவுக்கு பதில் சொல்வேன்.

இப்ப இங்கிலாந்தில் (Manches ter Air port UK) மஞ்சற்ற விமான நிலையத்தில் லகேச் எடுக்க பெல்ற் அருகே வந்தால்.

உங்கள் சூட்கேசும் பொதுவாக ஒரேமாதிரி இருக்கும் என ஒரு வாசகத்துடன் ஒரு சூட்கேஸ் வைக்கப்பட்டு இருந்தது.

('Many bags look the same')

எனது சூட்கேஸ் தூரத்தில் ஒற்றைப்பின்னலுக்கு ரிபன் கட்டினதுபோல் ஒரு உதாகலரில் வெள்ளைப் புள்ளியுடன் வந்தது. அடையாளம் மாறுமா? அம்மா பெத்த புள்ளை ஆச்சே. நாளை பேரன் அவுஸ்ரேலிய பொனாலும். இந்த ரிபன் கட்டப்பட்டு இருக்கும். ஏன் பாடசாலை சுற்றுலா போகும் போதே நான் ரிபன் கட்டி காட்டிக்கொடுத்துவிட்டடேனே. ■

படம்: வெற்றிமணி

09 ஆம் பக்கத் தொடர்ச்சி...

## நீரிழிவினால்

கற்றரக்ட் கற்றரக்ட் என்பது கண்வில்லை வெண்மையடைந்து பார்வையக் கெடுப்பதாகும். வெண்புரை நோய் என்றும் சொல்லப்படுகிறது. இந்த வெண்புரை நோயானது வயதாகும் காலத்தில் எவருக்கும் வரக்கூடிய ஒன்றே. இருந்தபோதும் நீரிழிவு நோயாளர்களுக்கு குறைந்த வயதிலேயே வந்து பார்வையை மறைக்கும்.

### குளுக்கோமா

குளுக்கோமா என்பது கண்ணின் உட்புறம் உள்ள அழுத்தம் (pressure) அதிகரித்து அதனால் பார்வை நரம்பு பாதிப்புறுவதாகும்.

இதுவும் யாருக்கும் ஏற்படக் கூடுமாயினும் நீரிழிவு உள்ளவர்களை ஏனையவர்களை விட இரு மடங்கு அதிகமாகப் பாதிக்கிறது என்பது குறிப்பிடத்தக்கது இந்த நோய்கள் எல்லாம் ஒருவருக்கு வந்தால் கண் பார்வையை முழுமையாகப் பழைய நிலைக்குக் குணமாக்குவது சிரமம். பெரும்பாலும் பார்வை மேலும் மோசமடைவதைத் தடுப்பதாகவே இருக்கும். எனவேதான் காலக்கிரமத்தில் கண்மருத்துவரைச் சந்தித்து கண் பரிசோதனை செய்வது அவசியமாகும். “எனக்கு கண் நல்லாத் தெரியுது” என்று கூறியவருக்கும் விழித்திரையில் பாதிப்பு ஏற்பட்டிருந்தது. ஆரம்ப நிலை என்பதால் பாரிய சிகிச்சைகள் தேவைப்படவில்லை. நீரிழிவு உள்ளவர்கள் தங்கள் குருதியின் சீனி அளவை கணிப்பதுடன் திருப்தியடைந்து விடக் கூடாது. கொஞ்சம்தானே அதிகமாக இருக்கு என அசட்டையாக இருக்கவும்கூடாது. ஏனெனில் நீரிழிவால் ஏற்படும் பாதிப்பு என்பது வெறும் குருதிச் சீனியின் அளவு அல்ல. கட்டுப்பாட்டில் இல்லாத நீரிழிவானது சிறுநீரகம், நரம்புகள், இரத்தக் குழாய்கள், இருதயம், கண் என உடலில் உள்ள ஒவ்வொரு உறுப்புகனையும் சதாகாலமும் பாதித்துக் கொண்டே இருக்கிறது தங்களுக்கு ஏதாவது பாதிப்பு இருக்கிறதா என்பதை நேரகாலத்துடன் கண்டறிந்தால் அவை மேலும் மோசமடைவதைத் தடுக்க முடியும். ஆரம்ப நிலையில் நீரிழிவைக் கண்டுபிடித்து அதனை பூரண கட்டுப்பாட்டிற்குள் வைத்திருப்பதால் பாரிய பாதிப்புகள் ஏற்படாது தவிர்த்துக் கொள்ளலாம். ■

13 ஆம் பக்கத் தொடர்ச்சி...

## ஆரத்தழுவுதல் அமரநிலையேன்று

“நடுமையரசியவள் எதற்காகவோ நாணிக் குலைந்திடுவாள்“

தம் நிலையறிந்த பாரதி அத்தனை அழகாய் உள்ளக்கிடக்கையை மொழி பெயர்க்கிறார்.

**கூடிப் பிரியாமலே – ஓரிரவெலாம்**
**கொஞ்சிக் குலவியங்கே**
**ஆடி விளையாடியே –**
**உன்றன் மேனியை**
**ஆயிரங்கோடி முறை**
**நாடித் தழுவி மனக் குறை தீர்த்து நான்**
**நல்ல களி யெய்தியே**

**பாடிப் பரவசமாய் – நிற்கவே தவம்**
**பண்ணிய தில்லையடி!**

ஆரத்தழுவுதல் அமர நிலை யென்றறிந்து தந்த பாரதியின் மொழி வரமே நம் தவமாகட்டும்!

கண்ணம்மா! நின்னைக்கூடவேண்டும். அதுவும் பிரயாமல் கூடவேண்டும். முச்சுக் காற்றுகளின் பரிமாற்ற இடவெளியில் ஓர் இரவு முழுவதுமாய் உன்னை முத்தமிட்டு, முத்தமிட்டு, முத்தமிட்டு காவியம்போல் நாம் அன்பு மொழி பேசவேண்டும். ஆறுமணி நேரத்தில் ஆயிரம்கோடிமுறை தழுவ வேண்டும். அதுவும் சரச விளையாடல்கள் புரிந்து நானே நாடித்தழுவ வேண்டும். (பாரதியின் காதலில் உள்ள கனிவு, அகங்காரம் அழித்த அன்பின் தன்மை, இவற்றிற்கு நாடி தழுவுதல் என்னும் சொல்லழகு தருகின்கிறது.

இதய சந்தங்கள் இணையும் வண்ணம் உன்னைத் தழுவின் என் மனதுள் கட்டுண்ட குறை, கவலை, தீரும். இதயக்கனம் அகலும். இவ்வாறான அத்தனை செயல்களும் நல்ல களி எய்திக்கவல்லன. (எக்கணம் நினைக்கும் போதும் பேரானந்தம் தரவல்லன. எவ்வித சலன அன்பும் அற்றது என்பதாய் நல் களி என்கிறார்.)

எல்லையற்ற அந்த ஆனந்தத்தின வெளிப்பாடே இசையாய் பரவச விசையாய் அமையும். இவ்வாறெல்லாம் வேண்டுவன பெற நான் எப்பிறவியிலும் தவம் பண்ணி இருக்கவில்லையே! ஆடடா! என் அதிஷ்டமும்,புண்ணியமும் இவ்வளவுதானோ?

உன் பேரானந்த நிலை முன்னமே தெரிந்திருந்தால், உன்னைப் பெறவேண்டி எத்தனை ஜென்மம் வேண்டுமாயினும் தவம் பண்ணியிருப்பேனோ? எனக் கண்ணம்மாவின் மகிமை உணர்ந்து மனது சலிக்கிறார் மகாகவி.

ஆரத்தழுவுதல் அமரநிலையென்று, அறிந்து தந்த பாரதியின் மொழிவரமே நம் தவமாகட்டும். ■


மகாஜனக் கல்லூரி பழைய மாணவர் சங்கம் ஐக்கிய இராச்சியம்
Mahajana College Old Students Association United Kingdom
பெருமையுடன் வழங்கும் Proudly Presents


16 ஆவது மகாஜன மாலை
16 th Year Mahajana Maalai

ADMISSION/பிரவேசம்
தனிநபர் : £ 20.00
குடும்பம்: £ 50.00
விஜபி: £ 50. 00

முன்னாள் ஆசிரியர் அமரர் செல்லத்துரை அரங்கத்தில்

23.10.2022 ஞாயிற்றுக்கிழமை
பிற்பகல் 6 மணியிலிருந்து
மண்டப கதவுகள் 5.30
மணிக்கு திறக்கப்படும்.

இடம் நட்சத்திரா மண்டபம்
Nakshatra Hall, Sankey Lane Middlesex Feltham TW13 7NA
அனைவரும் வருக! வருக!



THAVA: 07761666424 | SEYONE: 07961155560 | KANESH: 079 46640368 | KUMARAN: 078 25617634



# விஜய்க்கு வில்லனான அர்ஜுன்

லோகேஷ் கனகராஜ் இயக்கத்தில் விஜய் நடிக்கவுள்ளார். பொதுவாக லோகேஷ் கனகராஜ் படம் என்றாலே அவற்றில் அதிகப்படியான வில்லன்கள் இடம் பெறுவது வழக்கம்.

இந்தப்படத்தில் தென்னிந்திய மற்றும் பொலிவுட்டிலிருந்து பிரபலங்களை அழைத்து வந்து நடிக்க வைக்க இருக்கிறாராம் லோகேஷ் கனகராஜ். பொலிவுட்டிலிருந்து சஞ்சய் தத், மலையாளத்திலிருந்து பிரித்விராஜ் ஆகியோர் இந்த படத்தில் நடிக்க இருப்பதாக சொல்லப்படுகிறது.

அந்த வகையில் மொத்தம் இந்த படத்தில் ஆறு வில்லன்கள் என்றும் அதில் ஒருவராக நடிகர் அர்ஜுன் நடிக்க இருக்கிறார் என்றும் ஒரு தகவல் வெளியாகி உள்ளது.




# வாழ்க்கையே சோகமான ஐஸ்வர்யா ராஜேஷ்

தற்போது 6 படங்கள் கைவசம் வைத்து நடித்து வருகிறார். ஐஸ்வர்யா ராஜேஷ் அளித்துள்ள பேட்டியில், "என் பெயரில் இருக்கும் ஐஸ்வர்யம் வாழ்க்கையில் இல்லை. சிறு வயதிலிருந்தே நிறைய கஷ்டங்களை அனுபவித்தேன். எனக்கு எட்டு வயது இருக்கும் போது அப்பாவின் அன்பை இழந்தேன். ஒரு சாலை விபத்தில் இரண்டு அண்ணன்களும் மரணம் அடைந்தனர்.

வாழ்க்கை எனக்கு புதிது புதிதாக பாடங்கள் கற்றுக்கொடுத்துக் கொண்டே இருக்கிறது.

சினிமாவிற்கு வந்த புதிதிலும் அதற்கு முன்பும் நிறைய அடி மீது அடி வாங்கினேன். அதனால் தானோ என்னவோ இப்போது என்னை தோல்வி அவ்வளவாக பாதிப்பதில்லை. பெரிய கதாநாயகி என்ற பெயர் கிடைக்காவிட்டாலும் பரவாயில்லை. நல்ல நடிகை என்ற பெயர் கிடைத்தால் போதும். நான் நடித்த கதாபாத்திரங்கள் ரசிகர்கள் மனதில் நிலைத்திருக்கும் படியாக இருக்க வேண்டும் என ஆசைப்படுகிறேன்" என்றார்.

# சிவாஜி- 2 தயார்



சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்தும், பிரம்மாண்ட இயக்குனர் ஷங்கரும், புராதன தயாரிப்பு நிறுவனமான ஏ.வி.எம். நிறுவனமும் இணைந்து உருவாக்கிய திரைப்படம் சிவாஜி.

கடந்த 2007 ஆம் ஆண்டு ரிலீஸான சிவாஜி திரைப்படம் அந்த ஆண்டின் பிளாக்பஸ்டர் திரைப்படங்களில் ஒன்றாக அமைந்தது. அதன் பின்னர் ஷங்கரும் ரஜினிகாந்தும் இணைந்து எந்திரன் மற்றும் 2.0 ஆகிய பிரம்மாண்ட படங்களை உருவாக்கினார்கள்.

இந்நிலையில் சிவாஜி வெளியாகி 15 ஆண்டுகளை சில வாரங்களுக்கு முன்னர் நிறைவு செய்துள்ளது. அதைக்கொண்டாடும் விதமாக ஏ.வி.எம். நிறுவனம் சமூகவலைதளப் பக்கத்தில் பல சுவாரஸ்யமான புகைப்படங்கள் மற்றும் வீடியோக்களைப் பகிர்ந்தது.

அதையடுத்து இயக்குநர் ஷங்கர் சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்தை சந்தித்து அந்த புகைப்படத்தை இணையத்தில் பகிர, அது வைரலானது. இந்நிலையில் இப்போது சிவாஜி படத்தின் இரண்டாம் பாகத்தை தயாராக இருப்பதாக ஏவிஎம் நிறுவனத்தின் குகன் தெரிவித்துள்ளார். மேலும் கதை உள்ளிட்ட விஷயங்கள் தயாராக இருந்தால் எப்போது வேண்டுமானாலும் அந்த படத்தை தயாரிக்க தயாராக உள்ளதாக கூறியுள்ளார்.

# நாயகிகளுக்கு மதிப்பே கிடையாது



சிம்ரன் ஜோதிகாவை அடுத்து ரசிகர்களால் மிகவும் நேசிக்கப்பட்டவர் தமன்னா.

தமிழ் திரைப்பட உலகில் வெள்ளை அழகி என இவரை ரசிகர்கள் அழைத்து வருவதுண்டு. இந்த நிலையில் சமீபத்தில் ஒரு சினிமா நிகழ்ச்சியில் கலந்து கொண்ட தமன்னா சினிமாவில் நாயகிகளுக்கு மதிப்பே கிடையாது என ஆதங்கத்தை கொட்டித் தீர்த்துள்ளார். சினிமாவில் பெண்களுக்கு மதிப்பே இல்லை என்றும் பெண்கள் பேச்சை ஒரு பொருட்டாகக் கூட சினிமாக்காரர்கள் மதிக்க மாட்டார்கள் என்றும் கதாநாயகருக்கு வழங்கப்படும் சம்பளத்தில் பாதி கூட கதாநாயகிகளுக்கு வழங்கப்படுவதில்லை என்றும் தெரிவித்துள்ளார்.

இந்த போக்கு ஆரம்பத்தில் இருந்தே தொடர்கிறது என்று கூறிய தமன்னா, கதாநாயகிகள் புகைப்படம் போஸ்டர்களில் வருவதே இல்லை என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.
























விளம்பரம் அறிமுகம் செய்யும். தரம் அதை நிலைபெறச் செய்யும்.